அரசியல், சமூக, பொருளாதார இதழ்

# எழுநிலம்

மாத இதழ் | மணம் 21 | பெப்ரவரி 2023 | திருவள்ளுவர் ஆண்டு 2053





## துயில் எழு!!

## தமிழே!! உனை வணங்குகிறேன்!!

## திருமணத்திற்குப் பின் பெண்களின் தொழில் செய்யும் உரிமை!

## பின்னணி என்ன?

பொழில்



# தமிழே!! உனை வணங்குகிறேன்!!

தாயே உனைப் பாட
தினமொன்று போதாது!
தமிழை வணங்காது
என் கட்டை வேகாது!!

உலகில் மூத்த மொழி!!
உயிரில் கலந்த ஒலி!
தேமதுரத் தமிழில் - நான்
'அம்மா' என்றழைத்த - என்
ஆரம்பப் பேச்சு மொழி!!

கருவிலேயே கேட்டதுண்டு
உருவிலே,எழுத்தாகப்
பார்த்த பின்பு
கைபிடித்து எழுதிய
முதலெழுத்து 'அ'

இப்போது எனக்கிருக்கும்
விசனம்
அன்னைத் தமிழே!!
'த' என்றல்லவா - நான்
தொடங்கியிருக்க வேண்டும்?
'தமிழ்' அல்லவா - எங்கள்
அனைவருக்கும் அன்னை?

மொழியாக மட்டும்
உயர்ந்து நீ நிற்காமல்
தமிழன்
கலாசாரத்தையும் அல்லவா
கை கோர்த்து
அழைத்துச் சென்றாய்!!

பாசையையும் தமிழன்
பண்பாட்டையும்
தரம் பிரித்து
வரையறுக்க
முடியாது தாயே!!

எங்கள் வாழ்வியலில்
எங்கும் தமிழ்!!
எதிலும் தமிழ்!!
பண்டைத் தமிழை
பரலோகம் அனுப்பி வைக்க
எம் தாயகத்தில்
இழியோரின் சதிவேலை.
உனைக் காக்க,
மொழியை மூச்சாகவும்
தாயகத்தை (இதயத்)
துடிப்பாகவும் கொண்ட
பல்லாயிரம் பேர்

இங்கு
வித்தாக வீழ்ந்தார்கள்!!
தாயகத்தில் வீழ்ந்த விதை
தரணியெங்கும் விருட்சமாக
கிளைத்து நிற்கிறது!
உலகெங்கும்
ஒலிக்கிறதுஅழகு தமிழ்!!

தமிழன் பெருமைகளை,
அவன் சுமக்கும்
சிலுவைகளை
அகிலமெங்கும்
காவிச்செல்கிறது.

எழுத்துக்கு இலக்கணம்
செய்தன
பண்டைய மொழிகள்
எல்லாம்!
பொருளுக்கே இலக்கணம்
கொடுத்த
ஒரே பரிபாசை - உலகில்
நீதானே அம்மா!!

பத்துப்பாட்டு,
எட்டுத்தொகை,
பதினெண் கீழ்க்கணக்கு,
பதினெண் மேல்கணக்கு,
ஐம்பெருங் காப்பியம்,
ஐஞ்சிறு காப்பியம்
திருமுறைகள் பன்னிரெண்டு,
பிரபந்தம் நாலாயிரம்,
உலகநீதி, முதுரை,
கொன்றை வேந்தன், நல்வழி

அகத்தியம்,
தண்டி அலங்காரம்,
தொல் காப்பியம்,
நன்னூல்,
யாப்பெருங்கலக் காரிகை
அப்பப்பப்பா..
சொல்லச் சொல்லத்
தொடரும்!
சொல்லாமல் விட்டாலும்
மனம் மறுகும்!

பாரதியையும்
வள்ளுவனையும்
உலகமே கொண்டாட
நாம் மட்டும்
மறந்து போவோமா என்ன?
தமிழன் என்ற
பெருமையுடன்
எமை வழி நடத்தும் உனை
தலைசாய்த்து
வணங்குகிறோம்!


தமிழ் அம்மா!!
நீ வாழி!! வாழி!!
உன் வழி தொடரும்
தமிழின் பண்பாடு வாழி!!
வாழி!!

**(பெப்ரவரி 21 உலக மொழித் தினத்தில் அன்னை தமிழை வணங்கி எழுதப்பட்டது.)**

மாத இதழ் | மணம்: 21
பெப்ரவரி
தொடர்புகளுக்கு:-
ezhunilam@yahoo.com
www.ezhunilam.com

# உள்ளடக்கம்...


- ஆசிரியர் கருத்து... 05
- பின்னணி என்ன?... 06
- சிறிலங்காவின்... 09
- அசமந்தப்போக்கில்... 12
- துயில் எழு!! (கவிதை).... 14
- நில ஆக்கிரமிப்பைத்... 15
- நினைவுகள் சுமந்து!!!.... 18
- ஊசி இலையும்... 19
- வங்க தேசத்தின்... 21
- திருமணத்திற்குப் பின்... 25
- சே குவேரா (அங்கம்:03).... 28
- ஆரோக்கிய வாழ்வு.... 30
- உணவு அரசியலின் ... 32
- வலை (அங்கம் 07)... 35

# திருக்குறள்

**குறள் 034:**

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற"

**விளக்க உரை:**

ஒருவன் தன்மனதில் குற்றம் இல்லாதவனாக இருக்க வேண்டும். அறம் அவ்வளவே: மனத்தூய்மை இல்லாத மற்றவை ஆரவாரத் தன்மை உடையவை.















ஆழிப் பேரலை போராட்டத்தை சிதைத்ததை எவராலும் தடுத்திருக்க முடியாது.

ஆனால் பேரலை போல் வந்த குண்டுகள் எம்மவர்களைக் கொன்றபோது எல்லோரும் கைகட்டி வேடிக்கை பார்த்தார்களே.

மறக்க முடியுமா? மனிதம் மலரட்டும் கவிதை சுப்பர். அதற்கு மிகவும் பொருத்தமான படம். அருமை.

**சியாமளா சிவநேசன்**
**கௌன்சிலோ, லண்டன்.**

நிலம் பறிபோய்க்கொண்டிருப்பதை நாங்கள் எல்லோரும்தான் கவலையோடு பதிவிடுகிறோம். ஆனால், தொடர்ந்தும் அராஜகம் பண்ணுகிறார்களே.

தீர்வைப் பெற்றுத் தருகிறோம் என்று எங்கள் தமிழ் அரசியல்வாதிகள் அடிக்கும் கூத்தை காலங்காலமாகப் பார்த்துக் கொண்டிருந்தும் நம்பிக்கை வைக்கலாமா?

**ஸ்ரெல்லா மேரிதாசன்**
**(ஜேர்மனி)**

சீனியர் சிற்றிசன் பற்றிய கட்டுரை எவ்வளவு உண்மை. வயது முதிர்ந்தவர்களை இப்போதெல்லாம் சீராட்டிப் பார்ப்பவர்கள் ரொம்பவும் குறைச்சல்.

நமக்காகவே வாழ்ந்து தளர்ந்த அவர்களுக்குள் எவ்வளவு வேதனைகள் ஒளிந்து கிடக்கின்றன. ஒரு வேண்டுகோள்.

கதைகள், கவிதைகள் என்பனவற்றை அதிகமாகப் பிரசுரிக்க முடியுமா? சுயநலவாதிகளின் அரசியற் கட்டுரைகளைப் பார்த்து மனம் வெறுத்துப் போகிறது.

**கல்யாணி**
**வெங்கடரமணன்**
**(பிரான்ஸ்)**

தயவுசெய்து கருணா என்ற துரோகியின் படத்தை இனிமேல் போடாதீர்கள். இத்தனை ஆயிரம் உறவுகளின் உயிரைக் குடிக்கக் காரணமாயிருந்த இனத் துரோகி அவன்.

இந்தக் காக்கைவன்னியன் அன்றே மாண்டிருந்தால் இவ்வளவு துன்பங்கள் எங்களுக்கு வந்திராது. புலிகளின் அருமையை எதிர்த்தவர்கள் கூட காலம் கடந்து உணர்ந்து வருந்துகிறார்கள்.

**மதிநிலா தமிழ்வாணன்**
**(நெதர்லாந்து)**

உலகில் நடைபெறும் போராட்டங்கள் பற்றிய பதிவுகள் உத்வேகத்தையும் அதேசமயம் எங்கள் இழப்புகளை அதிகப்படுத்தியும் வேதனை தருகின்றன. இப்போதைய தலைமுறையினர் தமக்கென்ன வந்தது என்பதுபோல கலாசார சீரழிவும் போதையுமாக தான் தோன்றித்தனமாக வாழ்வது இன்னுமொரு வேதனை.

**திருமாறன்**
**பாலசுப்பிரமணியம்**
**(சியாட்டில், அமெரிக்கா)**




ஆரோக்கிய வாழ்வு கட்டுரை நன்று. அவசியமானதும் கூட. இந்த அவசர யுகத்திற்கு ஏற்றவாறு மருத்துவக் குறிப்புகள் தொடர்பான கட்டுரைகளையும் இடைக்கிடை தருவீர்களா? போதையால் அழிந்து கொண்டிருக்கும் இளைய தலைமுறைக்கான அறிவுரைகளை தொடர்ந்தும் பிரசுரியுங்கள்.

**சுபேசன் கந்தசாமி**
**( சிட்னி)**

பெண்கள் தொடர்பான கவிதை ஒன்றை ஓரமாகப் போட்டிருக்கிறீர்களே. கவிதைக் கரு அத்தனையும் உண்மை.

சேகுவேராவின் வரலாறு எத்தனை தடவைகள் வாசித்தாலும் சலிக்காது. பெண் விமானி பற்றிய தகவல் அருமை.

எங்கள் நாட்டில் இப்படி எத்தனை திறமைசாலிகள் மறைந்திருக்கிறார்கள்? மண்ணுக்குள் புதைந்து போயிருக்கிறார்கள்?

**மகிழினி ஈஸ்வர்**
**(மலேசியா)**

உங்கள் ஊர்ப் பாணியில் வரும் வலை நெடுங்கதை மனதை அள்ளுகிறது. நாங்கள் ஈழ அபிமானிகள். சஞ்சிகையை வாசிக்கும் போது நாங்களும் அங்கு இருப்பது போன்ற உணர்வு வருகிறது. போகிற போக்கில் ஈழத்து அரசியலும் எங்கள் அரசியல்போல் ஆகிவிடுமா என்ற அச்சம் வருகிறது.

**மணிகண்டன் சாமிநாதன்**
**(மடிப்பாக்கம், தமிழ்நாடு)**

புதுப் பொலிவுடன் உங்கள் கைகளில்...
Ezhunilam.com

# தமிழர்களைத் துண்டாடும் புதிய போர் வடிவம்!

## ஆசிரியர் பக்கம்

தமிழ் மக்களுக்கு ஆதரவுக் கரம் நீட்டுகிறோம் என்ற போர்வையில் வடக்கு, கிழக்கு வாழ் தமிழர்களைத் தன் கட்டுப்பாட்டில் முழுமையாக வைத்திருக்கும் வேலையை கன கச்சிதமாகச் செய்து வருகிறது இந்தியா. இது திடீரென்று எடுக்கப்பட்ட ஒரு முடிவல்ல. நீண்ட காலத்திற்கு முன்பே நன்கு திட்டமிடப்பட்டு, அதைத் திறம்பட நடத்துவதற்கான முகவர்கள் எம் மக்களோடு மக்களாக கலக்க வைக்கப்பட்டு, படிப்படியாக தன் ஆதிக்கத்தை உறுதிப்படுத்தும் ஒரு திட்டமிடப்பட்ட இந்திய சூழ்ச்சி இது. இதன் ஒரு அங்கம்தான் இப்போது வெளித் தெரியும் இந்து மத ஆதரிப்பு.

இலங்கையில் தனது பிடியை நிரந்தரமாக வைத்திருக்க இந்தியா கைவசம் வைத்திருக்கும் துருப்புச் சீட்டுத்தான் தமிழ் மக்களேயன்றி எமது பிரச்சனைகளைத் தீர்க்கும் எண்ணம் இந்தியாவுக்கு சிறிதளவும் இல்லை. இன்னும் சொல்லப்போனால், எமது மக்களின் பிரச்சனைகளைப் பூதாகரமாக்குவதும் அதைத் தீர்க்க தமிழர் பக்கம் நிற்பது போலவும் மாறி மாறி ஊதி, தமிழர் பிரச்சனைகளை எப்போதும் கொதிநிலையிலேயே வைத்திருக்கின்றது என்பது கடந்த காலம் எமக்கு உணர்த்திய கசப்பான உண்மை.

இதனை உணர்ந்துதான் அந்நிய சக்திகள் யாரும் உள்நுளையாதவாறு கட்டிக் காத்தார்கள் விடுதலைப் புலிகள். அந்தக் காலத்தில் தமிழர் தாயகப் பிரதேசம் மட்டுமல்லாது சிங்களப் பிரதேசம் கூட அந்நியர் பிடியிலிருந்து பாதுகாக்கப்பட்டு வந்தது தெரிந்ததே. அவர்கள் இருந்திருந்தால் இவ்வளவு பொருளாதார நெருக்கடி எழுந்திராது என்று சிங்களர்களே இன்று விசனம் தெரிவிக்கிறார்கள்.

அப்போதெல்லாம் அரசியல், இராணுவ ரீதியில் வாலாட்ட முடியாதிருந்த இந்தியாவின் கை இப்போது எங்கள் தாயகத்தில் ஓங்கியிருக்கிறது. இது இந்தியா தமக்கு நல்லது செய்ய வந்திருப்பதான மனப்பிரமையை மீண்டும் சிலருள் கிளர்த்தியுள்ளது வேதனைக்குரியது.

எமது மக்களைக் கவரும் விதமாகவும், இலங்கையினுள் இடம்பிடிக்கத் துடிக்கும் ஏனைய நாடுகளுக்கு அச்சுறுத்தலாகவும் தமிழர் தாயகப் பரப்பெங்கும் இந்திய உதவிகள் அள்ளி வீசப்பட்டுள்ளன. பலாலி விமான நிலைய மீள் திருத்தமும் விரிவாக்கமும், காங்கேசன்துறை துறைமுக மீள் புனரமைப்பு, மன்னார் இந்திய கப்பற் சேவை, கொழும்பு - யாழ்ப்பாண தொடரூந்து தண்டவாளம் புனரமைப்பு, 11 மில்லியன் டொலர் செலவில் யாழ்ப்பாணத்தில் கலாசார மண்டபம் என்று பட்டியல் நீண்டுகொண்டே செல்கிறது. இவற்றில்இந்திய அதானி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்த மன்னார் பிரதேச காற்றாலைகள் அமைக்கும் திட்டம், அப்பிரதேச மக்களின் எதிர்ப்பினால் தற்போது நிறுத்தி வைக்கப் பட்டிருக்கிறது.

இந்திய ஆதிக்கத்தின் இன்னொரு வடிவம்தான் எமது மக்கள் சமஸ்கிருதம் படிக்க வேண்டும், யாழ் பல்கலையில் சமஸ்கிருத கற்கைமுறை ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற கூக்குரல்.பின்னால் இருந்துஇந்திய தூதரகமும், 'றோ' முகவர்களும்தான் இதனை செய்ய வைக்கிறார்கள் என்பது எமது அரசியல்வாதிகளுக்கும், இந்தியாவை வால் பிடித்து தொங்கிக் கிடக்கும் சில சக்திகளுக்கும்தெரியாமல் இல்லை. இலங்கை சிங்கள பௌத்த நாடு, தமிழர்களுக்கு எந்த உரிமையும் கொடோம் என்று பிக்குகள் மூலம் பிரச்சனைக்கு தீர்வு கிட்டவிடாமற் செய்யும் சிங்கள அரசுக்கு இணையாக சைவம் என்ற பிரச்சனை தற்போது தமிழர் தாயகத்தில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

இந்துக் கலாசாரத்தை ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கு இங்கு இடமில்லை, ஒரு சைவர் மட்டுமே யாழ் நகர மேயராக முடியும், அரச அதிபர்களாக சைவர்களைத் தவிர யாரும் நியமிக்கப்படக் கூடாது, இந்து மத வேட்பாளர்களுக்கு மட்டுமே தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும், கிறிஸ்தவப் பாதிரிகள் யார் பதவிக்கு வரவேண்டும் என்று தீர்மானிக்கக் கூடாது, பல்கலைக் கழக மாணவர் போராட்டங்களில் பாதிரிகள் கலந்து கொள்ளக் கூடாது. என்று தொடரும் அத்தனை பிரச்சனைகளையும் இந்தியத் தூதரகம் வெளிப்படையாக ஆதரிக்கிறது.

தமிழர் நிலப்பரப்பு எங்கும் சைவக் கோவில்களில் புத்தர் சிலைகள் முளைப்பதை இந்தியா தட்டிக் கேட்டதில்லை. ( அண்மையில் நிலாவரைக் கிணற்றடியில் இரவோடிரவாக முளைத்த புத்தர்சிலை மக்கள் எதிர்ப்புடன் அகற்றப்பட்டது.) தமிழர் தொன்மையுடன் இணைந்துள்ள புராதனச் சின்னங்களை - அவற்றுள் சைவக் கோவில்களும் அடக்கம் -பாதுகாக்க கரம் கொடுத்ததும் இல்லை. ஆனால், எமது தாயகத்தில் இந்துத்துவத்தை வலுப்படுத்த துடிப்பது மட்டும் ஏன்?

சைவர்களைகிறிஸ்தவ மக்களுக்கு எதிராகத்தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்கிறது இந்தியா. மக்களுக்கிடையில், முன்னைநாள் போராளிகளுக்கிடையில், அரசியல்வாதிகளுக்கிடையில், பல்கலைக்கழகத்தில், மாணவர்களுக்கிடையில், படித்து உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கிடையில் என்று எல்லாத் தரப்பு மக்களுக்கிடையிலும் முரண்பாடுகளை ஏற்படுத்தத் துடிக்கும் இந்தியாவின் கபட நோக்கத்தை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். காப்பர் எவருமில்லாத நேரத்தில் இந்தக் கபடதாரிகளின் வலையில் வீழ்ந்துவிடாமல் தற்காத்துக் கொள்வது எம் மக்களின் கரங்களிலேயே உள்ளது.

# பின்னணி என்ன?



தேசியத் தலைவர் திரு பிரபாகரன் அவர்கள் காலத்தால் அழிக்கப்பட முடியாத ஒரு உண்மையான தலைவர். தாயக மக்களின் மனங்களில் மட்டுமல்லாது உலகத் தமிழர் மனங்களிலும் குடி கொண்டுள்ள ஒரு உன்னத மனிதர். அவர் மீது அவதூறு எனும் சேற்றை வாரி இறைப்பவர்கள் இருக்கிறார்கள், ஆயிரம் பொய்களைக் கட்டவிழ்த்து விடுபவர்கள் இருக்கிறார்கள். ஆனாலும், தனிப்பட்ட வாழ்க்கையிலும் ஒரு தலைவனாகவும் ஒழுக்கம், கண்ணியம், கட்டுப்பாடு, நேர்மை குன்றாத ஒரு மாமனிதர் அவர் என்பதில் எந்த மாற்றுக்கருத்தும் கிடையாது. அவரை எதிரியாகப் பார்ப்பவர்கள் கூட அவரை வியந்திருக்கிறார்கள்.

இப்போது பிரச்சனை அதுவல்ல. தலைவரின் மீள்வருகை அல்லது இருப்புப் பற்றிய பழ. நெடுமாறன் திடீரென்று விட்ட அறிக்கை உலகெங்கும் அதிர்வலைகளை ஏற்படுத்தி இருக்கிறது. வருவாரா? இது உண்மையா..? என்று ஒரு சாரார் வர வேண்டும் என்று பெரும்பாலோர்.. வரவே மாட்டார் என்று துடித்துப் பதைத்துக் குரலெழுப்புவோர் சிலர், குறிப்பாக புலம் பெயர் தேசங்களில் உள்ளவர்கள், என்று அத்தனை தமிழர்களும் அல்லோலகல்லோலப்பட, இடையில் எமக்கிருந்த அத்தனை பிரச்சனைகளும் மறக்கடிக்கப்பட்டு விட்டன.

திடீரென்று புறப்பட்ட இந்தப் பூதமும் எதையோ எதிர்பார்த்துத்தான் கிளம்பியிருக்க வேண்டும். பழ. நெடுமாறன் அவர்களும், காசி ஆனந்தன் அவர்களும் தம்மை ‘றோ’வினர் விலைக்கு வாங்கிவிட்டதாக எழும் குற்றச்சாட்டுகளை வன்மையாக மறுக்கின்றனர். மரபணுப் பரிசோதனை செய்யப்பட்டு, இறந்துபோனது தலைவர்தான் என்று உறுதிப்படுத்தப் படவேயில்லை என்று சென்னை தடயவியல் நிறுவன இயக்குனராக இருந்த வைத்தியர் சந்திரசேகரனை மேற்கோள் காட்டி, தமது தரப்பை நியாயப்படுத்துகின்றனர் அவர்கள்.

பாரி



# பின்னணி என்ன?

‘இறந்து போன ஒருவரின் பெயர் குற்றப் பத்திரிகையில் இருக்க முடியாது, ராஜீவ் காந்தி வழக்கில் இருந்து தலைவர் பெயர் அப்புறப்படுத்தப் படவில்லை, இலங்கை அரசு மரணச் சான்றிதழ் வழங்காதது ஏன்?’ என்று அவர்கள் எழுப்பும் கேள்விக்கு ‘உள்நாட்டு விடயங்களை மற்றவர்களுக்கு நிரூபிக்க அவசியமில்லை’ என்று சின்னத்தனமாகப் பதிலளித்து அவர்கள் கூற்றுக்கு வலுச் சேர்த்திருக்கிறார் இலங்கையின் முன்னைநாள் கடற்படை அதிகாரியும் அமைச்சருமான சரத் வீரசேகர.

2009 இல் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின், முன்னைநாள் போராளிகளின் வாழ்க்கையும் பல திருப்பங்களுடன்தான் செல்கிறது. இன்றும் உண்மையாகவே மண்ணையும் மக்களையும் நேசிப்பவர்களாக இருப்பவர்கள், புனர்வாழ்வு என்ற பெயரில் சிங்களத்தின், றோவின் கைக்கூலிகளாக இயங்குபவர்கள், இடையில் அதிகாரத்துக்கு வரத் துடிப்பவர்கள், தலைவருடன் கடைசி வரையில் பயணித்ததாகக் கூறி வரலாற்றை மாற்றி எழுதுவோர், நிதி சேகரித்து தம்மை வளர்ப்பவர் என்று பல கோணங்களில் சிதறுண்டு கிடக்கிறார்கள் அவர்கள்.

நாட்டில் மக்கள் சீந்துவாரின்றிக் கிடக்க, தாயகநிதியில் கேளிக்கைகளும் கொண்டாட்டமுமாக வெளிநாடுகளில் பகட்டு வாழ்க்கை வாழ்வோர், போராட்டத்தின் அரிச்சுவடியே தெரியாமல் பிறநாடுகளில் சொகுசாக வாழ்ந்து, இப்போது தலைமைத்துவம் இன்றி கேட்பாரின்றி இருக்கும் நிலையில் தம்மை ஒரு முன்னைநாள் தளபதியாகக் காட்டிக் கொள்வோர் என்றும் ஒரு பகுதியினர் கிளம்பி யாரை நம்புவது என்று தெரியாத ஒரு நிலையை உருவாக்கிவிட்டுள்ளனர். இந்த நிலையில் தலைவர் இருக்கிறார், இல்லை என்று பொது வெளியிலேயே அவர்களுக்குள் மோதல் நடைபெறுவது சந்தர்ப்பவசத்தால் நடைபெறுவது போலத் தெரியவில்லை. சூத்திரதாரிகள் யாரோ மறைவிலிருந்து இந்த நாடகத்தை அரங்கேற்றுவதாகத் தெரிகிறது.

இந்த அறிக்கையின் விளைவாக இலங்கை அரசாங்கத்தின் தமிழ்ப் பிரதேசங்களில் தொடரும் நில அபகரிப்பு நிறுத்தப்படும் என்று நம்புகிறது ஒரு தரப்பு. தமக்கு இனி மீட்சியில்லை என்று சோர்ந்து போயுள்ள மக்கள் நம்பிக்கை பெறுவார்கள், தமக்கெதிரான அக்கிரமங்களுக்குக் குரல் கொடுப்பார்கள் என்றும் புலி வேசத்தில் புலம்பெயர் தேசங்களில் கொட்டம் அடித்தவர்கள் அடங்கிப் போவார்கள் என்றும் நம்புகிறார்கள் அவர்கள்.

அதே சமயத்தில், இது தலைவர் பெயருக்குக் களங்கம் கற்பிக்கும்



**மக்கள் விழிப்புடன் செயற்பட வேண்டும் என்பதுதான் இங்கு முக்கியமான விடயம். தமிழ் மக்களை பகடைக்காய்களாகப் பயன்படுத்தி சுயலாபம் பெற நினைக்கும் தனி நபர்களாக இருந்தாலும் சரி, நாடுகளாக இருந்தாலும் சரி, நாங்கள் ஏமாறக் கூடாது என்று இத்தனை ஆண்டுகள் போராடியவர்கள் நாங்கள். கடந்த காலங்களில் நாங்கள் இழந்தவற்றை எண்ணி, சரியான வழித்தடத்தில் எம்மக்கள் பயணிப்பார்களா? இல்லை வதந்தியா, உண்மையா என்ற ஆராய்ச்சியில் வாழ்க்கையை ஓட்டுவார்களா? பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.**



முயற்சி, இறுதி யுத்தத்தில் வெளிவராத தகவல்களை எடுக்கும் முயற்சி இது, முன்னைநாள் போராளிகளுக்கிடையில் பிளவை ஏற்படுத்தும் சதி, இதைப் பயன்படுத்தி விசமிகள் யாரும் நிதி திரட்டலாம், சிங்களர் தமக்கிடையிலான அரசியற் பிளவுகளை மறந்து ஒன்றுபடும் வாய்ப்பு. என்று திட்டமிட்டு செய்யப்பட்ட சதிதான் இது என்பதில் உறுதியாக இருக்கிறார்கள் இன்னொரு சாரார்.

இடையில், சீனாவின் பிடியில் முழுமையாக அமிழ்ந்துவிடும் நிலையிலிருக்கும் இலங்கையின் போக்கு தனக்கு ஒரு பெரிய ஆபத்து என்பதால் இந்தியா அதைத்தடுக்க எந்த முயற்சியும் எடுக்கும். வடக்கு கிழக்கில் நடைபெறும் அத்தனை அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் இந்தியாவின் மிகப்பெரும் பங்குண்டு. பலாலி விமான நிலைய அபிவிருத்தி, காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி, மன்னார் – தமிழ் நாடு இடையிலான கப்பற் சேவை, யாழ் – கொழும்பு துரித ரயில் தண்டவாளம் அமைக்கும் பணி, அண்மையில் யாழில் திறந்து வைக்கப்பட்டபதினொரு மில்லியன் டொலர் செலவில் அமைக்கப்பட்ட கலாசார மண்டபம் என்று எங்கு பார்த்தாலும் இந்தியாவின் கை வடக்கு, கிழக்கில் ஓங்கியே நிற்கிறது. தமிழ் மனங்களை வென்று இலங்கையை கிடுக்கிப் படிக்குள் வைத்திருப்பதில் கவனமாக இருக்கிறது இந்தியா.

மாகாணசபைக்கான அதிகாரங்களில் காணி, காவற்துறை தொடர்பான அதிகாரங்களைப் பங்கு போட்டால் சரி, 13ம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி தமிழர்களுக்கு நியாயம் கிடைக்கச் செய்யாமல் இம்முறை விடப் போவதில்லை என்று அதீத கரிசனத்தை தமிழர்பால் காட்டும் இந்தியாவின் கை ‘‘தலைவர் வருகை’யின் பின் இருக்கிறதா? அல்லது, தேர்தலை நடத்தப் போவதாக அறிவித்து, இப்போது. ‘தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது என்ற அறிவிப்பே தேவையில்லை ஏனென்றால்தேர்தல் பற்றிய சட்டரீதியிலான அறிவிப்பெதுவும் வெளியிடப்படவில்லை’ என்று பூக்கடையையே நம் காதில் சுற்றும் ரணில் ஜயாவினதும் அவரின் ஆட்களினதும் நரி வேலையா? இல்லை, வேறு யாராவதா?

மக்கள் விழிப்புடன் செயற்பட வேண்டும் என்பதுதான் இங்கு முக்கியமான விடயம். தமிழ் மக்களை பகடைக்காய்களாகப் பயன்படுத்தி சுயலாபம் பெற நினைக்கும் தனி நபர்களாக இருந்தாலும் சரி, நாடுகளாக இருந்தாலும் சரி, நாங்கள் ஏமாறக் கூடாது என்று இத்தனை ஆண்டுகள் போராடியவர்கள் நாங்கள்.கடந்த காலங்களில் நாங்கள் இழந்தவற்றை எண்ணி, சரியான வழித்தடத்தில் எம்மக்கள் பயணிப்பார்களா? இல்லை வதந்தியா, உண்மையா என்ற ஆராய்ச்சியில் வாழ்க்கையை ஓட்டுவார்களா? பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

> **2009 இல் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின், முன்னைநாள் போராளிகளின் வாழ்க்கையும் பல திருப்பங்களுடன்தான் செல்கிறது. இன்றும் உண்மையாகவே மண்ணையும் மக்களையும் நேசிப்பவர்களாக இருப்பவர்கள், புனர்வாழ்வு என்ற பெயரில் சிங்களத்தின், றோவின் கைக்கூலிகளாக இயங்குபவர்கள், இடையில் அதிகாரத்துக்கு வரத் துடிப்பவர்கள், தலைவருடன் கடைசி வரையில் பயணித்ததாகக் கூறி வரலாற்றை மாற்றி எழுதுவோர், நிதி சேகரித்து தம்மை வளர்ப்பவர் என்று பல கோணங்களில் சிதறுண்டு கிடக்கிறார்கள் அவர்கள்.**



நவீனன்




# சிறிலங்காவின் சுதந்திர தினமும் தமிழர் உரிமை இழந்த தினமும்

### காணாமல் போன 1948 பெப்ரவரி 4:

சிறிலங்காவின் வரலாற்றில் கறைபடிந்த வடுக்களைப் பதிவாக்கிக் கொண்ட இனக் கலவரங்களையும், இனப்படுகொலைகளையும் உரு வாக்கிய சிங்கள அரசுகளின் சுதந்திர தினத்தை தமிழ் மக்கள் அனுஸ் டிக்க வேண்டும் என பேரினவாதம் கட்டாயப்படுத்துவதைக் கண்டிக்கா மல், உலகம் கண்மூடிக் கொண்டிருப்பது கவலைக்குரியதே.

சிறிலங்காவின் சுதந்திரதினம் என்பது சிங்களவர்களிற்கானது என்று ஆக்கப்பட்டபோது நாட்டின் சுதந்திர தினம் சிறுபான்மைத் தமிழ் மக்களிற்கு வேதனைக்குரிய நாளாகிப் போனது. சுதந்திர தினத்தைப் புறக்கணிப்பதே ஒரேவழி என்று தமிழ் மக்கள் நீண்ட காலமாகவே முடிவு செய்து கடைப்பிடிக்கின்றனர்.

தமிழர்க்கான சுதந்திரத்தை தர மறுத்துவிட்டு சுதந்திரதினத்தைக் கொண்டாடுங்கள் என்றால் அது எந்த வகையில் நியாயமாக இருக்க முடியும்? பிரித்தானிய காலனியாதிக்கத்தில்இருந்து விடுவிக்கப்பட்ட பெப்ரவரி நான்காம் தினமே முன்னைய இலங்கையின் (Ceylon ) சுதந்திர தினமாக அனுஷ்டிக்கப்பட்டது யாவரும் அறிந்ததே.

### இரண்டாம் தர பிரஜைகளாக தமிழர் :

ஆயினும் இன்றைய சிறிலங்காவில் (Sri Lanka) சிங்களவர்க ளுக்கு சுதந்திரம் கிடைத்த 75 வருடங்கள் ஆகினாலும், சிறுபான்மை யின தமிழர் இரண்டாம் தர பிரஜைகளாக அல்லது ஏதிலிகளாக வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்பதே வரலாற்று உண்மையாகும்.

இந்தியாவின் சுதந்திரத்திற்கான தேசிய எழுச்சி பிரித்தானிய காலனியாதிக்கவாதிகளுக்கு எதிராக அகிம்சை வழியிலும், ஆயு தப் போராட்ட வடிவத்திலும் பரந்துபட்ட மக்களை இணைத்து நடாத்தப்பட்ட போராட்டமாகும். இந்தியாவின் போராட்டத்தின் பக்க விளைவுகள் இலங்கையிலும் பிரதிபலித்ததாய் இருந்தது என்பதே சாட்சியமாகும்.

ஆங்கிலேயர்களின் பிரித்தானிய நவ காலனித்துவ சுரண்டல் முறைமைக்குத் தம்மை மாற்றிக் கொண்டு இந்தியாவை விட்டு வெளியேறும் போது, இலங்கையையும் விட்டு வெளியேறினர்.

உண்மையில் இலங்கை தனது சுதந்திரத்திற்காக இந்தியா அளவிற்கு போராடவில்லை. இலங்கையின் சுதந்திரத்திற்காக தமிழ்




**போர் மௌனித்த 2009 முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் பின்னரும், சிங்களப் பேரினவாத அரசின் திட்டமிடப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகள் இன்னமும் தொடர்கின்றன.**

**ஆங்கிலேயரிடம் இருந்து இலங்கை சுதந்திரம் அடைந்திருந்தாலும் தமிழ் மக்களாக்கு இன்னமும் சுதந்திரம் கிடைக்கவில்லை என்பதற்கு சிறிலங்கா அரசின் இனத்துவேச ஆட்சியே காரணியாகின்றது.**



# சிறிலங்காவின் சுதந்திர தினமும்
# தமிழர் உரிமை இழந்த தினமும்

மக்களின் பங்களிப்பும் தியாகங்களும் அளப்பரியதாகும்.

பிரித்தானியரிடம் இருந்து 1948 பெப்ரவரி நான்கில் கிடைத்த இலங்கையின் சுதந்திரம் தமக்கான சுதந்திரம் என்று தமிழர்களால் உணரப்படாமல் தள்ளிப்போனமைக்கான முக்கிய காரணமாக ஆட்சியாளர்களின் விரோத இனத்துவேசம் அமைகின்றது.

பிரித்தானியர் சுதந்திரத்தை வழங்கும் போது இலங்கையின் அனைத்து இனத்தவர்களுக்குமே வழங்கினராயினும், துரதிர்ஸ்டவசமாக இலங்கையின் சுதந்திரம் பௌத்த சிங்களவர்களுக்காக ஆகிப் போனது காலத்துயரமே. இந்நிலைமையானது நாட்டின் சுதந்திரம் என்பது இலங்கையில் வாழும் ஒருபகுதியினருக்கு மட்டுமே என்றாயிற்று.

பிரித்தானியர் இலங்கைக்கு வழங்கிய சுதந்திரத்தை தமதாக்கியவர்கள் நாடும் தங்களுடையது, ஆட்சியும் தமக்கானது என்று முடிவு செய்தனர். அதை நிலைநிறுத்தப் பல்வேறு நடவடிக்கைகளை சிங்கள அரசுகள் மேற்கொண்டன. அதன் ஒரு அம்சமாக தமிழர்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாக ஆக்கப்பட்டதுடன், தமிழர்களைக் காலத்திற்குக் காலம் வஞ்சித்துத் தண்டிக்க வேண்டும் என்ற பேரினவாதிகளின் எண்ணப்பாங்கினாலும் அடிமைப் படுத்தப்பட்டனர்.

சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கையின் வடக்கு, கிழக்கு, மலையகம் வாழும் சிறுபான்மையின தமிழ் மக்கள் இரண்டாம் தரப் பிரஜைகளாக வாழும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம் என்ற உணர்வலைகளுக்கு சிங்கள அரசுகளால் உள்ளாக்கப் பட்டனர்.

### தமிழீழ அரசின் நிர்வாகத் திறமை:

இதுவே இன்று வரை சுதந்திர தினம் சிறுபான்மை வடக்கு, கிழக்கு, மலையக தமிழ் மக்களால் கொண்டாடப்படாமல் இருப்பதற்கு முக்கிய காரணமாக உள்ளது. ஆண்டாண்டு காலமாக சிங்கள அரசால் ஒடுக்கப்பட்ட சிறுபான்மையின தமிழ் மக்கள் தமது சம உரிமைகளை கோரி அகிம்சை, ஆயுதப்போராட்டம் என்று பல்வேறு வழிகளில் போராடி வந்தனர்.

தமிழ் மக்களின் போராட்டத்தின் நியாயத் தன்மையை புரிந்து கொள்ளாத இலங்கை ஆளும் வர்க்கம் இவர்களின் போராட்டத்தை கொச்சைப்படுத்தி ஆயுத ரீதியில் ஒடுக்க முற்பட்டதன் விளைவு, தமிழீழ ஆயுதபோராட்டமாக வீரியம் அடைந்து, இருபது ஆண்டு காலம் தமிழீழ அரசின் நிர்வாகத் திறமை முழு உலகிற்கே புலப்பட்டது.

சிறிலங்காவின் சுதந்திரம் என்பது தமிழரை ஒடுக்கும் ஒரு அரசின் கொண்டாட்டத்தினமே ஒழிய சிறுபான்மையின தமிழரின் கொண்டாட்டத்தினம் அல்ல என்ற உணர்வலைகளை மேலும் மேலும் அதிகரிக்கச் செய்தமைக்கு சிங்கள அரசின் கொடூர ஆட்சியே காரணமாகும்.

### சிங்கள அரச ஒடுக்குமுறை :

இதனாலேயே சிறிலங்காவின் சுதந்திர நாள் தமிழர் தாயகம் எங்கும் நீண்ட காலமாக பகிஷ்கரிக்கப்படும் ஒரு தினமாகவும் பரிணாமம் அடைந்துள்ளது. சிறிலங்காவில் தமிழர் உரிமை மறுக்கப்படும் சிறுபான்மையினர் என்ற உணர்வலை இன்னமும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

சிறிலங்காவின் சுதந்திர தினம் தமிழர்களுக்கு கரிநாளாக தாயகம் எங்கும் அனுஷ்டிக்கப்படுகிறது.சிங்களவர்களின் சுதந்திர தினத்திற்கு எதிராக பாரிய எதிர்ப்புப் போராட்டங்களும், பேரணிகளும் தமிழர் தாயகம் எங்கும் காலங்காலமாக முன்னெடுக்கப்பட்டுவந்துள்ளது, இனியும் தொடரும்.

போர் மௌனித்த 2009 முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் பின்னரும், சிங்களப் பேரினவாத அரசின் திட்டமிடப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகள் இன்னமும் தொடர்கின்றன. ஆங்கிலேயரிடம் இருந்து இலங்கை சுதந்திரம் அடைந்திருந்தாலும் தமிழ் மக்களாக்கு இன்னமும் சுதந்திரம் கிடைக்கவில்லை என்பதற்கு சிறிலங்கா அரசின் இனத்துவேச ஆட்சியே காரணியாகின்றது.

### தமிழர் தாயகப்பகுதிகளில் பௌத்தமயமாக்கல் :

ஈழத் தமிழர்களின் ஆயுதப் போராட்டம் 2009 இல் மௌனித்த பின்னரும் தமிழர் தாயகப்பகுதிகளில் பொது மக்களின் பூர்வீகக் காணிகள்



**தமிழரின் இனப் படுகொலைக்கான நீதி இதுவரை கிடைக்கவில்லை. காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் அரசு இதுவரை எவ்வித பொறுப்பும் கூறவில்லை. தமிழ் மக்களையும் சர்வதேசத்தையும் தொடர்ந்து சிங்கள அரசு ஏமாற்றி வருகிறது. இதனாலேயே பெப்ரவரி 4 ஆம் திகதியை காலம் காலமாக தமிழர்கள் கரிநாளாக தான் அனுஸ்டித்து வருகிறார்கள்.**



# சிறிலங்காவின் சுதந்திர தினமும் தமிழர் உரிமை இழந்த தினமும்

அபகரிப்பு, பௌத்தமயமாக்கல் என்பன இன்று வரை புதிய புதிய வடிவங்களில் தொடர்கிறது. போர் முடிந்து 14 ஆண்டுகள் கழிந்தும் பயங்கரவாதத் தடைச்சட்டம் இன்று வரை நீக்கப்படவில்லை. தமிழ் அரசியல் கைதிகள் இன்னமும் விடுவிக்கப் படவில்லை.

தமிழரின் இனப் படுகொலைக்கான நீதி இதுவரை கிடைக்கவில்லை. காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் அரசு இதுவரை எவ்வித பொறுப்பும் கூறவில்லை. தமிழ் மக்களையும் சர்வதேசத்தையும் தொடர்ந்து சிங்கள அரசு ஏமாற்றி வருகிறது. இதனாலேயே பெப்ரவரி 4 ஆம் திகதியை காலம் காலமாக தமிழர்கள் கரி நாளாக தான் அனுஸ்டித்து வருகிறார்கள்.

இறுதிப் போரில் அரச படைகளால் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை இன்னமும் தேடி வருடக்கணக்காக போராடி வருகிறார்கள். தமிழ் அரசியல் கைதிகள் பதினைந்து வருடங்களுக்கு மேலாக தமது விடுதலையை எதிர்பார்த்து சிறையில் வாடுகிறார்கள். தமது பூர்வீக நிலங்களை பறிகொடுத்துவிட்டு இன்றுவரை தமிழ் மக்கள் வீதியில் போராடி வருகிறார்கள். எதையுமே பொருட் படுத்தாது சிறிலங்கா அரசு சர்வதேசத்தை மிக சாணக்கியமாக ஏமாற்றி வருகிறது.

## தொடரும் சிங்கள குடியேற்றங்கள் :

இதேவேளை, தமிழர் பகுதிகளில் தமிழருக்கு அனுமதிவழங்காமல் சிங்கள குடியேற்றங்களுக்கு அனுமதி வழங்குகிறார்கள். தமது உரிமைகளுக்காக போராடும் மக்கள் கைதுசெய்யப்பட்டு கொடூரமாக அச்சுறுத்தப் படுகிறார்கள். இவ்வாறு தமிழர் தாயகத்தில் தமிழ் மக்களின் இருப்பு தற்போது கேள்விக்குறியாகியுள்ள நிலையில் சிறிலங்காவின் சுதந்திர நாளை தமிழ் மக்கள் கரிநாளாக பிரகடனப்படுத்தி, தமது எதிர்ப்பை சிங்கள அரசுக்கும் தெரிவிப்பதுடன் சர்வதேசத்துக்கு தமிழ் மக்களின் உண்மை நிலையை உரத்துக்கூறி வருகின்றனர்.

## கட்டாயப்படுத்தப்பட்டு திணிக்கப்பட்டசுதந்திர தினம்:

2010இன் பின்னர் தமிழர் தாயகம் எங்கும் மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்தபோது சுதந்திர தின நாளில் சகலரும் சிங்கக் கொடியை ஏற்றவேண்டும் என்று படைத்தரப்பு கண்டிப்பாக உத்தரவிட்டது. வர்த்தக நிலையங்கள், ஆட்டோக்கள் மற்றும் வாகனங்கள் என எங்கும் தேசியக்கொடி கட்டப்பட வேண்டும் என அரசின் இராணுவத்தால் கட்டாயப்படுத்தப்பட்டது. இதுவிடயத்தில் தயக்கம் காட்டுவோர் மீது படையினர் மேற்கொண்ட அடாவடித்தனங்கள் கொஞ்சமல்ல.

சுதந்திர தினம் என்பது ஒவ்வொருவரும் மனம், மெய், மொழிகளால் நினைந்து ஆத்மார்த்தமாக அனுஸ்டிப்பதாகும். சுதந்திர தினத்தை அனுஸ்டிக்க வேண்டும் எனக் கட்டாயப்படுத்துவது மகிந்தவின் ஆட்சியில் நடந்த மிக மோசமான கொடூர சம்பவமாகும்.

## தமிழ் மக்களின் வரலாற்றுக் கடமை:

'கடந்த பல ஆண்டுகளாக சுதந்திர தினத்தை வெற்றி விழாவாக சிங்களவர்கள் நாங்கள் கொண்டாடுகிறோம், நீங்களும் தேசியக் கொடியைத் தூக்கிப்பிடிக்க வேண்டும்' என்றால் இன மானம் உள்ள எந்தத் தமிழனும் செய்யப் போவது இல்லை.

தமிழ் இனத்தை அழித்துவிட்டு அந்த அழிப்பை, சிங்கள அரசுகள் வெற்றித் திருநாளாகக் கொண்டாட, அதற்கு சிங்கக் கொடியைத் தூக்கிப்பிடிப்பது என்பது எவ்வகையிலும் சாத்தியமாற்றதாகும்.

தமிழர்களுக்கான நீதி நிலைநாட்டப்பட்டு அவர்கள் சுதந்திரமாக வாழும் காலம் வரும் வரை தமிழர்களுக்கு சுதந்திர தினம் என்ற ஒன்று கிடையாது என்பதே முடிவாகும்.



# அசமந்தப்போக்கில் மக்களும் பாதிப்புக்குள்ளாகும் துப்பரவுப் பணியும்!!





இலங்கையிலுள்ள நகரங்களில் அதிக குப்பை சேரும் பட்டியலில் யாழ்ப்பாணமும் முன்னணி வகிக்கின்றது. மழைக்காலத்தில் சீரான திண்மக்கழிவகற்றல் என்பது சவாலானதொரு விடயமாகும். அதிலும் குறிப்பாக மாரி தொடங்கினாலே மழையோடு போராட்டம் ஆரம்பிக்கின்றது. இந்தக் காலத்தில் வீடுகளிலோ வீதிகளிலோ சரி, குப்பைகள் தேங்கி இருந்தால் துர்நாற்றம் வீசி நடமாட்டத்திற்கு இடையூறாவதோடு சூழல் மாசும் ஏற்படும்.

குறிப்பாக நகர்ப்புறங்களில் திண்மக் கழிவுகளை வெளியேற்றுவதில் பாரிய சிக்கல் தன்மை காணப்படுகின்றது. இருப்பினும் மாநகர சபை நிர்வாகத்தினரின் திண்மக் கழிவகற்றல் செயற்பாடூடாக வாகனங்களில் குப்பைகளை வீடுகள்,வியாபார நிலையங்கள், கைத்தொழில் நிறுவனங்கள் போன்றவற்றில் கழிவகற்றல் பணியில் ஈடுபட்டு வருவதனால் மக்களுக்குப் பெரிதும் துணையாக அமைகின்றது. இருப்பினும் வாரத்திற்கு ஒருமுறை மாத்திரமே குப்பை வாகனங்கள் வீதிக்கு வருகின்றமையால் அன்றாடம் சேருகின்ற குப்பைகளை சேர்த்து வைக்கமுடியாது இரவோடு இரவாக குப்பைகளை வீதியோரங்களில் வீசிச் செல்லும் நிலை காணப்படுகின்றது. பொதுவற்றிற்கு அருகாமையில் தூர இடங்களில் இருந்து கொண்டுவந்த திண்மக்கழிவுகளை வீசிவிட்டுச் செல்கின்றனர். இது போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் விடயமாக மாறி வருகின்றது. அதுமட்டுமன்றி விலங்குகள் அவற்றை நாலாபுறமும் இழுத்துச் சென்று போடுவதால் வீதிகள் அலங்கோலமாக காட்சியளிக்கின்றன. இவ்வாறான செயற்பாட்டால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதுடன் விலங்குகளும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றன.

எமது நாட்டைப் பொறுத்தமட்டில் கழிவுப்பொருள் முகாமைத்துவம் பாரிய சவாலாக காணப்படுவது உண்மைதான். இருப்பினும் திண்மக்கழிவகற்றலில் தரம் பிரிப்பு முறையை கையாள்வது மிகக் குறைவு என துப்புரவு பணியாளர்கள் கூறுகின்றனர். அன்றாட பாவனையில் திண்மக்கழிவுகளை மக்கள் மக்கள் திண்மக்கழிவகற்றலை ஒழுங்கான முறையில் மேற்கொள்ளாத காரணத்தால் சூழல் பாதிக்கப்படுவதுடன் குறித்த துப்பரவுப் பணியாளர்களும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

சமூகப் பொறுப்பற்ற பலரும் தமது வீட்டைச் சுத்தம் செய்தால் போதும் என்ற எண்ணத்தில் பொறுப்பற்று மக்கள் தமது வீட்டு,அலுவலக, கைத்தொழில் நிறுவனக் கழிவுகளைக் கண்ட கண்ட இடங்களில் போடுவது: குறிப்பாக வீதிகள், பாடசாலை, பல்கலைக்கழகம், ஆலயங்கள்,பொதுக் கட்டடங்களுக்கு போன்ற



**நா.சாருமதி**
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்



தரம்பிரிக்கத் தவறுகின்றனர் என்ற கருத்துத் தொடர்பில் ஒரு பணியாளரிடம் பேசியபோது.

மக்கள் தரம் பிரித்து குப்பைகளைக் கொடுக்காத பட்சத்தில் நாமே தரம் பிரிப் பதுண்டு. இதனால் வரும் பின் விளைவு கள் பல நோய்களை உருவாக்குகின்றன. ஒவ்வாமை, சிரங்கு, சுவாச நோய் என பல பிரச்சனைகளை நாம் எதிர்நோக்கி வரு கின்றோம். இதை மக்கள் சக மனிதர்களாக புரிந்து கொள்ள வேண்டியது அவசியம் என்றார்.

மக்கள் பெரும்பாலும் உக்கும், உக்காத கழிவுகளை ஒன்றாக பைகளில் இட்டு தரு வதனால் அதை பிரித்து கட்டி ஏற்றுவதில் நேரம் வீணாக்கப்படுவதுடன் துர்நாற்றம் வீசும் போது பணி மிகவும் கடினமாக இருப் பதாகக் குறிப்பிடுகின்றனர். இது தொடர் பில் மக்கள் தாமே உணர்ந்து குப்பைகளை தரப் பிரிப்புச் செய்து கொடுத்தால் தமக்கு பெரும் உதவியாக இருக்கும் என குறிப்பி டுகின்றனர். வீட்டுக் கழிவுகளை அப்புறப்ப டுத்த முன்வரும் இந்த துப்புரவு பணியாளர் கள் பற்றியும் சிந்திப்பது பொதுமக்களின் கடமையாகும்.குப்பைகளை வகைவாரி யாகப் பிரித்தெடுப்பதற்கு நேரமும் பணமும் செலவாகும் காரணத்தால் மக்கள் அசமந் தமாகவே இருக்கின்றனர். குப்பைகளில் உலோகம், பொலித்தீன், பிளாஸ்டிக், கண்ணாடி என உக்காத பொருட்களும் தாவரக்கழிவு போன்ற உக்கும் கழிவுகளும் உண்டு. இவற்றை வகைப்பிரிப்புச் செய் வதன்மூலம் மீள்சுழற்சி, கூட்டுப்பசளை போன்றன மேற்கொள்ளமுடியும்.

தினமும் வெளியேற்றும் வீட்டுக்கழி வுகளை உக்கும் உட்காத கழிவுகள் என வகை பிரித்து உக்கக்கூடிய காய்கறி இலைக் கழிவுகளை சேதனப் பசளைத் தயாரிப்பில் ஈடுபடுத்த முடியும். அது தவிர உட்காத பொலித்தீன், பிளாஸ்டிக் கழிவுகளை வெவ்வேறாகப் பிரித்து மாநகர சபை வாகனங்களில் கொடுப்பதன் ஊடாக அவை மீள் சுழற்சிக்கு உட்படுத்தப்படுவ தோடு துப்புரவு பணியாளர்களுக்கு மிகவும் உதவியாகவும் இருக்கும். அத்துடன்சூழல் பாதுகாப்பும் பேணப்படும். இது தொடர்பில் ஒரு துப்புரவு பணியாளர் ஒருவருடன் உரை யாடினோம்.

பலரும் குப்பை கூழங்களை வேறு பிரித்து தருவது குறைவாகவே காணப்படு கிறது. நாங்கள் தினமும் ஒவ்வொரு பிரதே சமாக வாகனங்களில் சென்று வீதியை துப்புரவு செய்வதோடு வீட்டு, வியாபார கழிவுகளையும் எடுத்து வருகின்றோம் மக்கள் எம்மைப் பற்றியும் சற்று சிந்திக்க வேண்டும் என பலமுறை கூறியும் கேட் காத பட்சத்தில் பிரித்து வையுங்கள் என கூறிச் சென்று விடுவது வழமை. எனக் கூறினார்.

காலம் தாழ்த்தியே மீள்சுழற்சி பற்றிய சிந்தனை எழுந்தாலும் சீரான திண்மக்கழி வகற்றலில் இனி அலட்சியம் காட்டுவது சூழலுக்கும் நமக்கும் ஆபத்தையே ஏற்ப டுத்தும். திண்மக் கழிவுகள் இருவகையில் கையாளப்படுகின்றன. குறிப்பாக எரித்து அழிக்கும் முறை, மற்றும் நிலத்தில் புதைக் கும் முறை என்பனவாகும். இது தவிர ஏரி, கடலில் கொட்டும் தன்மையும் காணப்படு வதனால் வளி மாசு, நில மாசு, கடல்வாழ் உயிரினங்கள் பாதிப்பு என பல பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

மேலும் அதிகளவு இடங்களில் டயர்கள், சிரட்டைகள், பேணிகள் வீசப்பட்டிருக்கும்போது மழைக்காலத்தில் நீர் தேங்கி நுளம்பு பெருக்கத் திற்கும் வழிவகுக்கும். இதனால் அண்மைக் காலத்தில் டெங்கு உள்ளிட்ட நோய்கள் பரவி வரு கின்றன. அதுமட்டுமன்றி வீதிகள்,வடிகான்களை துப்பரவு செய்தாலும் அவ்விடங்களில் மீண்டும் குப்பைகளை போடும் மக்களின் அசமந்தப்போக்கு மிகவும் கவலைக்குரியது. அத்தோடு குப்பைகளை தரம் பிரித்து கொடுக்கும் சோம்பலால் காணிக ளுக்குள்ளே எரிக்கின்ற செயற்பாடுகளையும் காணமுடிகின்றது. பிளாஸ்டிக் போன்ற பொருட் களை எரிப்பதனால் வளி மாசடையும் சந்தர்ப்பம் அதிகமாகக் காணப்படுகின்றது.

இது தொடர்பில் மக்கள் மத்தியில் அதிகளவு விழிப்புணர்வு அவசியமாகின்றது.குறிப்பாக முறையான திண்மக்கழிவு முகாமைத்துவ நுட்பங் களை பயிற்சிகள் ஊடாக கற்றுக்கொடுக்கப் பட வேண்டும். அதுமட்டுமன்றி வீதிகளில்



குப்பைகளை வீசுவோர் மற்றும்சூழலியல் சார் சட்டத்தை மீறுபவோருக்கு எதிராக தண்டனை கள்வழங்கப்படவேண்டும். இருப்பினும் மக்கள் தாமாக உணர்ந்து செயற்படாவிட்டால் நாடு குப் பைகளால் நிறையும் துர்ப்பாக்கிய நிலைக்குள் தள்ளப்படும் என்பதே உண்மை.

திண்மக் கழிவு முகாமைத்துவம் என்பது உடன டியாகக் கட்டமைத்துவிடக் கூடிய திட்டமல்ல. எனினும் மக்கள் குப்பைகளை அப்புறப்படுத்துவ தற்கு பொறுப்புணர்வுடன் செயற்படுவதன்மூலம் இந்த நெருக்கடி நிலையைத் தடுக்கமுடியும்.





# துயில் எழு!!

ஆக்சிஜனைத்
தொலைத்த காற்று!
தூய்மையை இழந்த நீர்!
செழுமையைமறந்த நிலம்!
சல்லடையாய்மாறிய வானம்!

இது அனைத்தும் எதனால்?
யோசிக்க
நேரமில்லையா?
இல்லை.
மனம் இல்லையா?
நாம்
சில ஆண்டுகளுக்கு முன்
வீதி தோறும்
சிவப்பு முக்கோணங்களை
கண்டோம்.

ஆனால், இன்று.
திரும்பிய திசை எல்லாம்
செயற்கை கருத்தரிப்பு
மையங்கள்.
அது எதனால்?
யோசிக்க நேரமில்லையா?
இல்லை
மனம் இல்லையா?

காடுகளை கான்கிரீட்
ஆக்கினோம்!
கங்கையை கழிவு
நீராக்கினோம்!
அழியா நெகிழியை
புதைத்தோம் மண்ணில்!
வாகனப் புகையால் விண்ணை
ஓட்டையாக்கினோம்

துரித உணவு என்ற பெயரில்
தீவனங்களை
தின்று கொண்டிருக்கிறோம்!!
உரங்களையும்,
உயிர்க் கொல்லிகளையும்
பயன்படுத்தி
உயிர்களை மட்டுமா
அழித்தோம்?
உயிர் அணுக்களையும்
சேர்ந்தே அழித்தோம்!!
இழந்ததை மீட்டெடுக்க
ஒரே வழி
இயற்கையுடன் இணைவோம்!
துரித உணவை
முடிந்தவரை தவிர்ப்போம்!
இன்று முதல் விழிப்போம் !

முல்லை பாஸ்கர்



ஐங்கரன் விக்னேஸ்வரா

# நிலை ஆக்கிரமிப்பைத் தொடரும் பாகிஸ்தான் இராணுவம்!!

## இந்தியாவுடன் இணைய 'பால்டிஸ்தான்' மக்கள் போராட்டம்.




இன–மத முரண்பாடுகள் தற்போது பாகிஸ்தானிலும் தீவிரமாக வலுத்து வருகிறது. நீண்ட காலமாக தனிநாட்டுக்காக போராடும் பலூச்சிஸ்தான் மக்களைப் போலவே, ஆக்கிர மிக்கப்பட்ட ஜம்மு காஷ்மீரில் வாழும் 'பால்டிஸ்தான்' (Baltistan) இன மக்கள் தற்போது இந்தியாவுடன் இணைய மாபெரும் மக்கள் போராட்டங்களை நடாத்தி வருகின்றனர்.

### இந்தியாவுடன் இணைய போராட்டம் :

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பில் உள்ள காஷ்மீரில் உள்ள பால்டிஸ்தான் (Baltistan) மக்கள், தாங்கள் இந்தியாவுடன் இணைய விரும்புவதாகக் கூறி இவ்வருடம் ஜனவரி 12ம் திகதியில் நடத்திய போராட்டத்தில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

ஜம்மு காஷ்மீரின் அங்கமாக இருந்த கில்ஜித் பால்டிஸ்தானை பாகிஸ்தான் ஆக்கிரமித்துக் கொண்டு, அதனை தங்கள் நாட்டின் ஒரு பகுதி என கூறி வருகிறது. எனினும், அதனை இந்தியா ஏற்கவில்லை. ஆக்கிரமிப்பு ஜம்மு காஷ்மீர் பகுதிகளும் இணைந்திருப்பதான வரை படமே இந்தியாவின் அதிகாரபூர்வ வரைபடமாக இந்திய மத்திய அரசு அறிவித்து வருகிறது.

ஆக்கிரமிப்பு ஜம்மு காஷ்மீரைச் சேர்ந்த கில்ஜித் பால்டிஸ்தானில் உள்ள ஸ்கார்டு என்ற நகரத்தில் இவ்வருட ஜனவரி 12ம் திகதி வியாழக்கிழமை, நடைபெற்ற மாபெரும் போராட்டத்தில், தாங்கள் இந்தியாவுடன் இணைய விரும்புவதாகவும், அதற்கேற்ப கார்கில் சாலையில் உள்ள எல்லை தடுப்பை பாகிஸ்தான் அகற்ற வேண்டும்



# நில ஆக்கிரமிப்பைத் தொடரும் பாகிஸ்தான் இராணுவம்!!

என்றும் கோரி முழக்கங்கள் எழுப்பப்பட்டன. இந்தப் போராட்டத்தில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

## இமயமலையில் இன்னோர் 'குட்டி திபெத்':

இமயமலைத் தொடரில் உள்ள காரகோரம் மலையின், கே-2 கொடுமுடியின் தெற்கில், 3,350 மீட்டர் உயரத்தில் உள்ள பால்டிஸ் தானை குட்டி திபெத் என்றும் அழைப் பர்.இங்கே திபெத்திய பல்தி மொழி, உருது, காசுமீர வட்டார மொழிகள்பேசப்படுகின்றன.

உயரமான மலைகளூடாக பல்தோரா பனிபடர்ந்த கொடுமுடிகள் கொண்ட இம் மண்ணில்,சிந்து ஆறு இவ்வழியாகத் தான் பாய்கிறது. இப்பகுதிகளில் இஸ்லாம் மதம் அறிமுகம் ஆவதற்கு முன்னர், போன் பௌத்தம் மற்றும் திபெத்திய பௌத்தம் முக் கிய சமயமாக விளங்கியது. அக்காலத்தில் திபெத்திய பல்தி மக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்தனர்.

இப்பகுதியில் தற்போது இஸ்லாம் பெரும் பான்மை சமயமாக இருப்பினும், துவக்க காலத்தில் இப் பகுதிகளில் பௌத்த சமயத் தைப் பின்பற்றும் திபெத்திய பல்தி மக்கள் வாழ்ந்தனர்.

கிபி ஏழாம் நூற்றாண்டுகளில் திபெத்திய பேரரசின் ஒரு பகுதியாக பால்டிஸ்தான் விளங்கியது. அத்துடன் பால்டிஸ்தான் பகு திகளில் பண்டைய பௌத்த தொல்லியல் களங்கள் அதிகமாக காணப்பட்டன.

கிபி 16 – 17ம் நூற்றாண்டுகளில் அரேபிய ஆதிக்கங்களால் சூபியிசம் பரவியதால், பால் டிஸ்தான் பகுதிகளில் பெரும்பான்மையான மக்கள் நூர்பக்சியா இஸ்லாம் பிரிவைத் தழுவினர்.

## பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு ஜம்மு-காஷ்மீர் :

நாடு சுதந்திரம் அடைவதற்கு முன், ஜம்மு காஷ்மீர் சமஸ்தானத்தின் ஒரு பகுதியாகவும், டோக்ரா மன்னரின் ஆட்சிக்கு உட்பட்ட பகுதியாகவும் தங்கள் பகுதி இருந்ததையும் பால்டிஸ்தான் மக்கள் தெரிவித்துள்ளனர்.

பால்டிஸ்தான் அல்லது மத்திய நிர்வாகத் தில் வடக்கு நிலங்கள் (Federally Administered Northern Areas) இந்தியா வடக்கில் அமைந்த ஓர் அரசியல் பிரிவு ஆகும்.

இப்பகுதியின் தலைநகரம் கில்ஜித். மொத் தத்தில் 1.5 மில்லியன் மக்கள் இப்பகுதியில் வசிக்கின்றனர். 1970இல் இந்த அரசியல் பிரிவு உருவாக்கப்பட்டது. இது கில்ஜித் மற் றும் பால்டிஸ்தான் என இரண்டாக பிரிக்கப் பட்டுள்ளது. வடக்கில் ஆப்கானிஸ்தான், வடகிழக்கில் சீன மக்கள் குடியரசு, தென் கிழக்கில் இந்தியாவின் ஜம்மு காஷ்மீர் மாநிலம் அமைந்தன. 2009ஆம் ஆண்டுடன் இப்பகுதியை வடக்கு நிலங்கள் என்று குறிப் பிடுவதை விட்டு கில்ஜித் –'பால்டிஸ்தான்' என்றே இந்திய அரசால் அழைக்கப்படுகிறது.

2017 பாகிஸ்தான் மக்கள்தொகை கணக் கெடுப்பின்படி 72,496 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட கில்ஜித்-பால்டிஸ்தான் பகுதியின் மக்கள் தொகை 1,492,924 ஆகும்.

## இந்திய-பாகிஸ்தான் எல்லைப் போர்:

26 அக்டோபர் 1947 அன்று ஜம்மு காசு மீரின் மன்னர் அரி சிங்கு, இந்தியாவுடன் செய்து கொண்ட உடன்படிக்கையை எதிர்த் து, பாகிஸ்தான் இராணுவம் மற்றும் பஷ்தூன் பழங்குடிகள் மேற்கு காசுமீர் பகுதிகளையும், கில்ஜித்-பால்டிஸ்தான்வடக்கு நிலப்பகுதி களை ஆக்கிரமித்து 'ஆசாத் காஷ்மீர்' எனப்பெ யரிட்டனர். ஆயினும் காசுமீர் சமவெளி, ஜம்மு பகுதி, லே மாவட்டம் மற்றும் கார்கில் மாவட் டங்கள் இந்தியாவுடன் இணைக்கப்பட்டன.

1947 – 1948 இந்திய-பாகிஸ்தான் போருக்குப் முன்னர் பாகிஸ்தானின் பஷ் தூன் மக்கள் காஷ்மீரின் வடக்கு நிலங்களைக் கைப்பற்றி பாகிஸ்தானுடன் இணைத்த பின் தற்போது இது பாகிஸ்தான் அரசுக்குக் கட்டுப் பட்ட மாநிலமாக உள்ளது. வடக்கு நிலங்கள் காஷ்மீரின் பகுதி என்றாலும் இதற்கு, மேற்குப் பகுதியான ஆசாத் காஷ்மீருக்கு உள்ள அதிகா ரங்களை பாகிஸ்தான் அரசு அளிக்கவில்லை. ஐக்கிய நாடுகள் அவையே காஷ்மீரின் வடக்கு பகுதியை குறிக்க வடக்கு நிலங்கள் என்ற சொல்லை முதலில் பயன்படுத்தியது.

1963 இல் பாகிஸ்தான் வடக்கு நிலங்கள் பகுதியிலிருந்து காரகோரம் பகுதியை சார்ந்த ஒரு பகுதியை சீன அரசிற்கு அளித்தது. உலகின் 2வது உயரமான கொடுமுடியான கே-2 மற்றொரு உயரமான கொடுமுடியான நங்க பர்வதம் இங்கு உள்ளன.பின்னர் 1971 இந்திய – பாகிஸ்தான் போருக்குப் பின்,



துர்துக், நூப்ரா பள்ளத்தாக்கும் இந்தியாவுடன் இணைக்கப்பட்டது.

இராசதந்திர பூர்வமாக, இந்தியா மற்றும் பாகிஸ்த்தான் நாடுகளுக்கு பால்டிஸ்தான் முக்கிய மையமாக உள்ளது. கார்கில் போர் மற்றும் சியாச்சின் போர்களுக்கு இப்பகுதி முக்கியத்துவம் கொண்டதாக விளங்கியது.




# நில ஆக்கிரமிப்பைத் தொடரும் பாகிஸ்தான் இராணுவம்!!

### இரண்டாம் தர மக்களாக :

தற்போது லடாக்கில் பால்டிஸ்தான் இன மக்களில் ஒரு பகுதியினர் இருப்பதையும் சுட்டிக்காட்டும் அவர்கள், தாங்கள் மீண்டும் இந்தியாவுடன் இணைய விரும்புவதாகத் தெரிவித்துள்ளனர். மேலும், பால்டிஸ்தான்இன மக்களை பாகிஸ்தான் இரண்டாம் தர மக்களாக நடத்துவதாகவும், தங்கள் நிலங்களை பாகிஸ்தான் ராணுவம் அபகரித்து வருவதாகவும் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

பால்டிஸ்தான் பகுதியில் உள்ள நிலங்களை ராணுவம் கையகப்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து முன்பு முசாபராபாத் நகரில் போராட்டம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு பேசிய பால்டிஸ்தான்

முன்னாள் பிரதமர் ராஜா ஃபரூக் ஹைதர், பாதுகாப்புப் படையினர் நிலங்களை கையகப்படுத்துவதற்கு பாகிஸ்தான் அரசு தடை விதிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இந்தியாவுடன் பால்டிஸ்தான் இணைய வேண்டும் என்பதை வலியுறுத்தி அப்பகுதி மக்கள் சமூக வலைதளங்களிலும் கருத்துக்களை பரப்பி வருகின்றனர். அவர்கள் பாகிஸ்தானை எதிர்த்தும், இந்தியாவை ஆதரித்தும் தொடர்ந்து பதிவுகளை இட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### நில ஆக்கிரமிப்பில் பாகிஸ்தான் ராணுவம் :

பால்டிஸ்தான் இன பொதுமக்களின் நிலங்களை ராணுவம் தொடர்ந்து கைப்பற்றி வருவதற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. எவ்வித இழப்பீடும் தராமல் நிலங்களை ஆக்கிரமிப்பதை பாகிஸ்தான் ராணுவம் பல ஆண்டுகளாக வழக்கமாகக் கொண்டிருப்பதாகக் குற்றம்சாட்டும் பால்டிஸ்தான் மக்கள், இதுவரை 60 லட்சம் சதுர மீட்டர் பரப்பளவு நிலங்களை பாகிஸ்தான் ஆக்கிரமித்திருப்பதாகக் கூறுகின்றனர். கில்ஜித்தில் உள்ள மினவார் என்ற கிராமத்தில் நிலங்களை ஆக்கிரமிக்க பாகிஸ்தான் ராணுவம் முயன்றதை அடுத்து, அந்தக் கிராம மக்கள் தெருவில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பாகிஸ்தான் ராணுவத்தின் நில அபகரிப்பு பிரச்னைக்குத் தீர்வு காண பாகிஸ்தான் பிரதமரோ அல்லது தலைமைச் செயலாளர் முன்வர வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர். இல்லாவிட்டால், இந்த விவகாரத்தை ஐ.நா சபையின்கவனத்திற்குக் கொண்டு செல்வோம் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

பாகிஸ்தான் ராணுவத்திடம் ஏராளமான நிலங்களை தாங்கள் இழந்துவிட்டதாகவும், இனியும் ஒரு அடி நிலத்தையும் இழக்க மாட்டோம் என்றும் அவர்கள் கூறியுள்ளனர். தங்களின் போராட்டத்திற்கு எதிராக ராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்தினாலும், குண்டுகளை ஏற்போமே தவிர நிலங்களை விட்டுக்கொடுக்க மாட்டோம் என அவர்கள் தெரிவித்துள்ளனர். மினவார் மக்களின் இந்தப் போராட்டத்திற்கு கில்ஜித் முழுவதும் ஆதரவு பெருகியுள்ளது. மேலும், பல இடங்களில் பாகிஸ்தான் ராணுவத்துக்கு எதிராக போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

நில அபகரிப்பு குறித்து கருத்து தெரிவித்துள்ள ஐக்கிய காஷ்மீர் மக்கள் தேசிய கட்சியின் தலைவர் சவுகத் அலி காஷ்மீரி, நாடு சுதந்திரம் அடைவதற்கு முன் பால்டிஸ்தான், ஜம்மு காஷ்மீர் சமஸ்தானத்தின் கீழ் இருந்ததாகவும், தற்போது பாகிஸ்தானின் ஆக்கிரமிப்பில் உள்ள காஷ்மீர் தொடர் புறக்கணிப்புக்கு உள்ளாகி இருப்பதாகவும் குற்றம்சாட்டியுள்ளார்.

கில்ஜித்தில் வாழும் பால்டிஸ்தான் மக்களின் அடிப்படை உரிமைகளை பாகிஸ்தான் அரசு மறுத்து வருவதாகத் தெரிவித்துள்ள சவுகத் அலி, காஷ்மீர் மக்களின் மத உணர்வுகளைத் தூண்டுவதை ஒரு கொள்கையாக பாகிஸ்தான் பின்பற்றி வருவதாக குற்றஞ்சாட்டி விமர்சித்தார்.



# நினைவுகள் சுமந்து!!!

## வாணி ஜெயராம் அம்மா!

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | : | கலைவாணி |
| வேறு பெயர் | : | ஏழு ஸ்வரங்களின் கான சரஸ்வதி |
| பிறப்பு | : | நவம்பர் 30,1945 |
| இறப்பு | : | பெப்ரவரி04,2023 |
| தொழில் | : | திரைப்பட பின்னணிப் பாடகி |
| இசைத்துறையில் | : | 1971 இல் இருந்து 2023 வரை. |

தமிழ்நாட்டிலுள்ள வேலூரில் இசைக்குடும்பத்தில் பிறந்தார்.1971இல் குட்டி எனும் இந்தித் திரைப்படத்தில்பின்னணிப் பாடகியாக அறிமுகமானார். அன்று தொடக்கம் இறுதி மூச்சு வரை இசைத்துறையில் வாழ்ந்தார்.

தமிழ்த் திரையுலகில் முதன்முதலாக1974இல் 'தீர்க்க சுமங்கலி' என்ற திரைப் படத்தில் 'மல்லிகை என் மன்னன் மயங்கும்' என்ற பாடலைப் பாடி அறிமுகமானார்.இதைவிட திரை இசை,பாப்,கஜால்,பஜனை,நாட்டுப்புறப் பாடல்கள் என பல இசை வடிவங்களில் பாடினார்.

இவர் பிற மொழிகளான கன்னடம்,தெலுங்கு,மலையாளம்,இந்தி,மராத்தி,ஒடிசா,குஜராத்தி,பெங்காலி ஆகிய பல இந்தியமொழிகளிலும் பாடினார்.

மாநில விருதுகளுடன்,தமிழக தேசிய விருதினையும்மூன்று முறை பெற்றுள்ளார்.இந்திய குடியரசுதினமான ஜனவரி 26,2023 அன்று இந்திய நாட்டின் உயரிய விருதான 'பத்மபூசண்' விருது வழங்கப்பட்டது.

எமது தாயகத்தில் இந்திய இராணுவ ஆக்கிரமிப்பு காலப்பகுதியில் எமது தாயக விடுதலைப் பாடல்கள்பலவற்றை உணர்வு பூர்வமாக பாடி,எம் விடுதலை உணர்வுக்குஉயிரூட்டிய குரல் 04பெப்ரவரி,2023 அன்று ஓய்ந்து போனது.

'களத்தில் கேட்கும் கானங்கள்', 'பாசறைப் பாடல்கள்' போன்ற ஒலி நாடாக்களில் பாடியுள்ள வாணி ஜெயராம் அம்மாவேறு சில எழுச்சிப் பாடல்களையும் பாடியுள்ளார்.

எம் விடுதலை உணர்வுகள் சுமந்து வாணிஜெயராம் அம்மா பாடியபாடல்கள் காலத்தால் அழியாத காவியங்கள். எழுநிலம் பத்திரிகை சார்பாகவும்,வாசகர் சார்பாகவும்,தமிழீழ மக்கள் சார்பாகவும் அவரது ஆன்மா சாந்தியடைய பிராத்திப்போம்.



**பின்னிணைப்பு**

**களத்தில் கேட்கும் கானங்கள்:**

1.பாடும் பறவைகள் வாருங்கள்
2.வீசும் காற்றே தூது செல்லு
3.தென்னங்கீற்றில் தென்றல்

**பாசறைப் பாடல்கள்:**

1.பரணிபாடுவோம்
2.மேகங்கள் இங்கு வாருங்கள்
3.வீரன் மண்ணில்புதையும் போது

**எழுச்சி பாடல்கள்:**

1.தலைவாரி பூச்சூடினேன்
2.செந்தமிழ் வீரனடா



மிதயா கானவி




# ஊசி இலையும் உன்னதம் பெறும் காலம்!

## இணுவையூர் மயூரனின் ஊசி இலையும் உன்னதம் பெறும் காலம் கவிதைத்தொகுப்பு

இந்நூலின் முதலாவது கவித்தலைப்பு

> *‘தக்கன பிழைக்கும்*
> *எத் தடை வரும்போதும்*
> *தன் நிலை மாறாமல்*
> *எதிர்கொண்டு நின்று பார் ’*

இது நூலாசிரியரது வாழ்விலும் இவை மிளிர்ந்திருக்கின்றது என்றுதான் சொல்லவேண்டும்.

சிறு பராயத்தில் தாய் மண்ணை விட்டு வந்து சுவிஸ் நாட்டில் வாழ்கின்றார், வேற்று மொழிகளில் பாடசாலைக் கல்வியைப் படிக்க வேண்டிய தேவை வந்தபோதும், தன் தாய் மண்ணின் நினைவுகளை சுமந்து திரிந்தது மட்டுமன்றி தமிழ் மொழியிலும் திறன் கொண்டு வளர்ந்து இன்று ஒரு நாள் கவிதை நூலை தந்திருக்கின்றார்.

இந்த கவிநூலை படைத்திருக்கும் மயூரனின் தமிழ்ப்பற்று தமிழ் மொழியை கற்பது கடினமானது என்று முயற்சிக்காமலே தள்ளிவைக்கும் இரண்டாம் தலைமுறையினருக்கும், தமிழ்மொழியை திட்டுதிட்டாய் கதைப்பதையே பெருமையாய் சொல்லி தமிழ்மொழியின் ஆழங்களை அறியவிடாமல் மூழ்கடிக்கும் பெற்றோர்களிற்கும் ஒரு முன்னுதாரணமாக அமைகின்றது.

தமிழர் பாரம்பரிய வாழ்வியலின் நீளமான பக்கங்களை நிழலாகத்தொடர்ந்து வரும் பேரெச்சங்களான நினைவுகளை அழகான வரிகளில் மட்டை வேலிகளைப்போலவே அடுக்கடுக்காய் வரிந்திருக்கின்றார் நூலாசிரியர்.

> *பூவரசமிலை வாசத்தோடு*
> *புசித்த நினைவுகளும்*
> *கள்ளக்கொய்யா பிடுங்கலும்*
> *பொக்கிசமாய் இன்று ..*

ஆனால் இன்று ஈழத்தில் வாழும் இந்த சந்ததி கூட குழந்தைப் பருவத்தை அனுபவிக்கமுடியாது புத்தகச் சுமைகளை சுமக்கின்றனர் என்பதும்

நாம் அறிந்ததே.

இந்த சந்ததி காணாத வாழ்வு ..

என் மனம் முழுக்க பரவிக்கிடப்பட்டன.. என்று தன் வரிகளால் காலத்தைப் பாடிவைக்கின்றார் .

எப்படித்தான் எங்கள் பண்பாட்டின் இனிய நினைவுகளை பாடித் தீர்த்தாலும் இன்றைய நிலையில் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் கலாச்சார பிறழ்வுகளையும் அதனை எம் இனமே கொண்டாடித் தீர்ப்பதன் வலிகளையும் மனமுடைந்து ஏமாற்றங்களால் வருந்தி வரிகளாக்கியிருக்கின்றார் மயூரன்.

வெஷாக் என்னும் தலைப்பிலும் இன்னும் சில வற்றிலும் இப்படி நீள்கின்றது.

> *பட்டி தொட்டி எங்கும்*
> *பகட்டான வளைவுகளும்*
> *ஆமத்துறு கையில்*
> *கட்டி விடும் நூல் பெரும்*
> *பாதுகாப்பு கவசமாய்*
> *வைரவ கோயில் பூசாரியின் மகன்*
> *வியந்து சொல்கிறான்*
>
> *பிறிதொரு இடத்தில்*
>
> *ஊர் கூடி இழுத்த தேர்*
> *ஊர் காவல் படை*
> *இழுக்க .*

முள்ளிவாய்க்கால் இனவழிப்பில் புலம்பெயர்ந்து வாழ்ந்த மக்கள் துடித்ததுடிப்பை கவிஞரின் வரிகளில் இப்படி புலம்புகின்றார்

> *பல தேசம் வாழ்ந்தோம்*
> *பார் எங்கும் தெரு விருந்தோம்*
> *பலனேதும் கிடைக்காமல்*

மீளாத்துயரில் தமிழினம் தவித்தபோது மீட்டு விடாத மனிதர்களை மட்டுமின்றி வற்றாப்பளை தெய்வத்துடனும் சண்டை போட்டுக் கொள்கின்றார் வரிகளால்.

வெட்கம் கெட்டவள்

தன் வீதி வழி பிணக்குவியல்

குவிந்திருக்க விடுப்புப் பார்த்தவள் இப்போ வீதியுலா வருகின்றாள்

இது நியாயமான கேள்விதானே..?

கடல் கடந்து வாழ்ந்தாலும் தாம் வாழ்ந்த இணுவையூரின் ஒற்றையடிப்பாதையெங்கும் உலாத்தி இனிப்பு புளியடியில் இளைப்பாறி



குணமலர் ரீச்சரின் குணமறிந்து வரவைத்திருக்கின்றார்.

அந்த ஊரில் வாழ்ந்திராத என்னையும். இதுவே மயூரனின் எழுத்துக்களில் நான் காணும் சிறப்பும் கூட.

கடும் வரட்சியில் தத்தளிக்கும் மீனாகி இன்று தன் ஊரிலும் அழிக்கப்படும் விழுமியங்களைப்பார்த்து இவ்வாறு நொந்து போகின்றார்.

இந்த முறை போனபோது பெருத்த ஏமாற்றம் அவரும் இல்லை அந்த மரமும் இல்லை தான் வாழும் சுவிஸ் நாட்டின் இயற்கை அழகை இரசித்துப்பாடியிருந்தாலும் எம் நாட்டிற்கு அது ஈடாகாது என்பதை நாசுக்காக சொல்லி நகர்கின்றார் இவ்வாறு..

*முல்லைப் பூவின் நிறத்தில்*
*வெள்ளைபணி*
*தள்ளி நின்று பார்த்திடத்தான்*
*கள்ள மனமும் ஏங்குதிங்கே*

*கொள்ளை அழகுதான் பனி*
*கிலி கொள்ள வைக்குது,*
*கடும் குளிரை நினைக்கையில்*

இவரின் அனேக கவிதைகள் தாய்மண்ணைப் பிரிந்து அந்த நினைவுகளிற்குள் தினமும் அரிபட்டு இருதலைக்கொள்ளி எறும்பாய் தவிக்கும் அனேக புலம்பெயரிகளின் குரலாக ஒலிக்கின்றது.

இக்கவிதைத் தொகுப்பிலுள்ள கவிதைகளின் கருக்கள் எனக்கும் மிக நெருக்கமாகவே சுழல்வதாலோ என்னமோ இந்நூலை படித்து முடித்தவேகத்தில் அதிலிருந்து வெளிவரமுடியாமல் உள்ளக்கிடக்கையில் உறைந்து கிடக்கின்றன பல வரிகள்.

புலம்பெயர் வாழ்வின் வாழ்வியலை வாழ்க்கைச் சுமைகளை மூடி மறைத்து எம் பகட்டு வாழ்விற்கு கதைபேசும் புலம்பெயரிகளின் அறியப்படாத பக்கங்களை துணிச்சலாக பாடியிருப்பது பாராட்டப்பட வேண்டியதே.

*என்ன வாழ்க்கை இது என்னும் தலைப்பில்*

*ஆம்ஸ்ராங்கைவிட அதிக ஆடையிருக்கும்.*
*கிலிசை கெட்ட வாழ்க்கை இது*
*நினைக்க நினைக்க கொதி வரும்*
*இப்படி தொடர்கிறது*

*புலம்பெயர்ந்தோர் வாழ்வு*
*புகழ் மிக்க வாழ்வென புகழுவோர்*
*புண்பட்டுக் கிடக்கும் எம்*
*உணர்வுகளை அறிவரா..*

*என் பிள்ளை இன்னொர் நாட்டின் சுதந்திர*
*அடிமையாய் பிறந்ததும்*
*அவன் பிள்ளை தான்*
*யாரென்று தெரியாத*
*இனமொன்றின் வாரிசுஆவதும்*

கவிஞரின் ஆதங்கம் ஆங்காங்கே பல இடங்களில் சிந்திக்கிடக்கிறது. இந்த சுட்டெரிக்கும் நினைவுகளை எல்லாம் இதமாக்கி போகின்ற தன் குழந்தைகளின் வருகையை

*புதல்வி புராணம் அழகாய் தோகை விரிகின்றது ..*
*வாசல் வந்து காலைப் பற்றி*
*அவள் வரவேற்பதற்காகவே*
*வலிந்து வலிந்து*
*வெளியே சென்று வருவேன்*

பணம் பறிக்கும் நாடு சுவிஸ் நாடு என தெரிந்திருந்த பலருக்கு பதின்மூன்று மாதச்சம்பளம் என்ற கவிதையை படித்தால் பலத்த ஏமாற்றம் வரும்.

*பால்,பாணைச் சுமந்த பவளக்கொடி கதை போல*
*பாரினில் நாம் வாழும் வாழ்க்கை கேளீர்*
*கொடுத்தவனே அத்தனையும் பறித்துக் கொள்ள*
*கோவணம் மட்டும் இங்கு மிச்சம் கேளீர்.*

செம்பகத்தின் குரலிலும் என்னும் கவியிலும் இப்படி சொல்கிறார். நாளை காசுக்காய் கரையப்போகும் வேடந்தாங்கல் சைபிரசின்..

நியமான வரிகளை தயக்கமின்றி சொல்லும் இணுவையூர் மயூரனின் கவிதைகள் வாசிக்கப்படவேண்டியவையே.

எல்லாக் கவிதைகளையும் நான் தொட்டுச் செல்லவில்லை

நாற்பது தலைப்புகளில் எழுத்தப்பட்டுள்ளன, பல கவிதைகள் ஏதோவொரு நெருடலை படிப்பவர்களின் மனதிலும் புதைத்து விடும் என்பதில் ஐயம் இல்லை.

அட்டைப்படமும் நூலாக்கமும் கவிதைகள் ஒவ்வொன்றுக்கும் கையகப்படுத்தும் கறுப்பு,வெள்ளைப் புகைப்படங்கள் படிப்பதற்கு இதமாக அமைந்தாலும் பின் அட்டையில் எழுதப்பட்டுள்ள வாசங்களின் எழுத்தின் அளவை சற்று பெருப்பித்திருந்தால் காண்பவர்களின் பார்வைக்குள் இலகுவில் சிக்கிவிடும் என்று எண்ணத்தோன்றியது .

இக் கவிதைகள் தாம் வாழும் சமூகத்துடன் பின்னிப்பிணைந்திருக்கும் உயிர்ப்பான உணர்வுகளின் வெளிப்பாட்டிலிருந்து பிறந்திருக்கின்றன.

மயூரனின் மொழிக்கையாட்சி மிகவும் இலகுவான நடைமுறைத்தமிழில் பதிவு செய்திருப்பதும், புதுக் கவி நடையில் வாசிக்கப்படுவதும் அனைவரும் விரும்பிப் படிக்கும் ஓர் வாய்ப்பை அளிக்கின்றது.


நாகரீக வளர்ச்சியும் தொழில்நுட்ப விரிசலும் எம் பாரம்பரியங்களை தின்று கொண்டிருந்தாலும் அந்த நினைவுகளை பொக்கிசமான பதிவுகளாக்கி தந்திருக்கும் இணுவையூர் மயூரன் பாடலாசிரியராகவும் அறியப்பட்டவர். இலக்கிய உலகில் பயணங்கள் நீள என் மனம் நிறைந்த பாராட்டுகள்.

ஊசி இலையும் உன்னதம் பெறும் காலம் (கவிதைகள்)
பக்கங்கள் 128
ஆசிரியர்- இணுவையூர் மயூரன்
மார்ச் 2020
வெளியீடு-அகநாழிகை
அனைத்துலக விற்பனை உரிமை
மகிழும் படைப்பகம்.





# வங்க தேசத்தின் மொழிப் போரும் ஈழத்தில் தனிச்சிங்களச் சட்டமும்!!




**உலக தாய்மொழி தினம்– பெப்ரவரி 21**

**தாய்** மொழிக்காக போராடி உயிரிழந்தவர்களை நினைவுகூறி, உலகில் அனைத்து மக்களின் தாய் மொழி உரிமையைப் பாதுகாக்கும் வகையில், பெப்ரவரி 21ம் தேதியை சர்வதேச தாய்மொழி தினமாக ( International Mother Language )ஐ.நாவின் யுனெஸ்கோ 1999ம் ஆண்டு பிரகடனப் படுத்தியது. இதையடுத்து 2000ம் ஆண்டி லிருந்து, பெப்ரவரி 21ம் தேதி உலக தாய்மொழிகள் தினமாக கொண் டாடப்படுகிறது.

தாய்மொழியின் அவசியத்தை உணர்த்தும் வண்ணம் வங்க தேசத் தின் மொழிப் போர் அமைகிறது. இதற்கான மூல காரணம் சரியாக எழுபது ஆண்டுகளுக்கு முன்னால் இன்றைய வங்கதேசத்தில் எழுந்த மொழிப் போரே இன்றைய சுதந்திர பங்களாதேஷின் விடுதலையின் அடிப்படைக் காரணமாகிறது.

## 1956 தனிச் சிங்களம் சட்டம் :

ஈழத்திலும் நீண்ட காலமாக நடக்கும் இனப் போராட்டத்தின் மூல காரணியும் மொழியே ஆகும். தனிச் சிங்களம் மட்டும் சட்டம் (Sinhala Only Act) அதிகாரபூர்வமாக 1956 ம் ஆண்டில் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க தலைமையிலான இலங்கை அரசாங்கத்தால் 1956 ஆம் ஆண்டு யூன் 5 ஆம் நாள் இலங்கை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. சிங்களம் மட்டுமே இலங்கையின் அரசகரும மொழியாக (Official Language Act) அறிவிப்பின் பின்னரே தமிழ் மக் கள் கொடுமையாக அரசால் ஒடுக்கப்பட்டனர்.

தனிச் சிங்கள சட்டம் நிறைவேற்றப்பட்டதன் மூலம் இலங்கை யின் ஆட்சிமொழியான ஆங்கில மொழி அகற்றப்பட்டு 70% பெரும் பான்மை சிங்களவர்கள் பேசும் சிங்கள மொழி மட்டுமே ஆட்சி மொழியாக்கப்பட்டது. நீண்ட காலமாக பிரித்தானியரின் ஆட்சியின்



# வங்க தேசத்தின் மொழிப் போரும் ஈழத்தில் தனிச்சிங்களச் சட்டமும்!!

கீழ் ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருந்தது. அரசுப் பதவிகளுக்கு ஆங்கிலம் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டிய அவசியம் இருந்தது. ஆயினும் 1936 ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்க சபைத் தேர்தலில் வெற்றி பெற்ற இடதுசாரிகளான என். எம். பெரேரா, பிலிப் குணவர்தனா போன்றவர்கள் ஆங்கிலத்திற்குப் பதிலாக சிங்களம், மற்றும் தமிழ் ஆகியவற்றை ஆட்சிமொழிகளாக்க வேண்டும் என வலியுறுத்தினார்கள். நவம்பர் 1936 இல், 'இலங்கைத் தீவு முழுவதும் உள்ளாட்சிகள் மற்றும் காவல்துறை நீதிமன்றங்களில் உள்ளூர் மொழிகளிலேயே வழக்குகள் நடத்தப்பட வேண்டும்' மற்றும் 'காவல் நிலையங்களில் சாட்சிகளின் மொழிகளிலேயே வழக்குகள் பதியப்பட வேண்டும்' போன்ற சட்டமூலங்கள் அரசாங்க சபையில் கொண்டுவரப்பட்டு சட்டச் செயலாளருக்கு மேலதிக ஆணைக்காக அனுப்பப்பட்டன.

## 1944 இல் ஜே. ஆரின் இனவாதம்:

ஆனால் 1944 ஆம் ஆண்டில் ஜே. ஆர். ஜெயவர்தனா ஆங்கிலத்துக்குப் பதிலாக சிங்களத்தை மட்டுமே அதிகாரபூர்வமொழியாக்க வேண்டும் என அரசாங்க சபையில் கோரினார். இதனூடாகவே இனவாதம் இலங்கையில் வேரூன்றியது. ஆனாலும் ஆங்கிலம் தொடர்ந்து 1956 வரை ஆட்சி மொழியாக இருந்து வந்தது.

1956இல் சிங்கள மொழி அரச கரும மொழியானது மட்டுமன்றி இந்த சட்ட மூலமே தீவெங்கினும் வாழ்ந்து வந்த சிங்கள -தமிழ் இனங்களிடையே முரண்பாடுகளை உருவாக்கக் காரணமாயிற்று. இதன் பின் தமிழர்கள் செறிந்து வாழ்ந்து வரும் வடக்கு, கிழக்கு பகுதிகளில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதுடன் அங்குள்ள அரச நிறுவனங்களில் பணிகள் முடக்கப்பட்டன.

## தந்தை செல்வா தலைமையில்போராட்டங்கள்:

தனிச் சிங்கள சட்டமூலத்தின் காரணமாக அரசுப்பணியில் உள்ள தமிழர்களும் சிங்களம் படிக்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாக்கப்பட்டார்கள். இச்சட்டத்தினை தமிழ், மற்றும் சிங்கள இடதுசாரி உறுப்பினர்கள் எதிர்த்தனர். ஆயினும் தமிழர் தரப்பில் எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் பல போராட்டங்கள், முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன. யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற தமிழர் பகுதிகளில் அரசின் செயற்பாடுகள் இயங்க விடாது செய்யப்பட்டன.

இந்தப் போராட்டங்களை அடுத்தே பண்டாரநாயக்கா 1958 ஆம் ஆண்டு 28ம் இலக்க திருத்தச் சட்டமொன்றை கொண்டு வந்ததுடன் தமிழ் மொழிக்கு சில விட்டுக்கொடுப்புகளை வேண்டா வெறுப்பாக ஏற்படுத்தினார். ஆயினும் இத்திருத்தங்கள் வெறும் கண்துடைப்பாகவே இருந்தன.

அன்று தொடங்கிய ஈழத் தமிழரின் போராட்டம் இன்னமும் ஓயவில்லை. எத்தனையோ இனப்படுகொலைகள் தமிழர் தாயகம் மீது நிகழ்த்தப்பட்டும், சர்வதேசம் இன்னமும் கண்ணை மூடிக் கொண்டே உள்ளது.

## அங்கீகரிக்கப்படாத தமிழர் இறையாண்மை:

உலக தாய்மொழி தின பிரகடனத்தின் மூல காரணியே வங்க தேசத்தின் மொழிப் போர் ஆகும். மொழிப்போரால் வெற்றி அடைந்த வங்க தேசத்தின் வரலாற்றை உலகம் அறிந்தாலும், ஈழத்தில் தனிச்சிங்கள சட்டம் மூலம் அழிந்த தமிழரின் இறையாண்மையை சர்வதேசம் அங்கீகரிக்காமல் இருப்பது கவலைக்குரியதே. ஆயினும் காலங் கடந்தாவது தமிழ் தேச இறையாண்மையை உலகம் ஏற்குமென நம்புவோம்.

மொழிப் போரில் வென்ற இன்றைய பங்களா தேஷில், [அன்றைய கிழக்குப் பாகிஸ்தான்] எங்களுக்கு வங்க மொழியே ஆட்சி மொழி பாகிஸ்தான் திணிக்கும் உருது மொழியை ஆட்சி மொழியாக ஏற்க முடியாது என்று அறிவித்து, 1952-ஆம் ஆண்டில் வங்காளிகள் நடத்திய உருதுமொழி எதிர்ப்புப் போராட்டத்தில் உயிர்நீத்த நான்கு மாணவர்களின் தியாகத்தைப் போற்றும் வகையில், அவர்கள் கொல்லப்பட்ட நாளான பெப்ரவரி 21-ஆம் நாள் உலகத் தாய்மொழி நாளாக அறிவிக்கப்பட்டது.




அன்றைய கிழக்கு பாகிஸ்தானில், உருது மட்டுமே தேசிய மொழியாக இருந்தது. ஒரே மதத்தினராக இருந்தாலும், மேற்கு பாகிஸ்தானில் அதிகம் பேசப்படும் உருது மொழியானது,


Attack on satyagrahis


S.W.R.D. speaking about the Sinhala Only Act


Mob attacks in Colombo


The mob in action


Burning of Emroy


Chelvanayakam satyagraha



# வங்க தேசத்தின் மொழிப் போரும் ஈழத்தில் தனிச்சிங்களச் சட்டமும்!!

கிழக்கு பாகிஸ்தானில் திணிக்கப்படுவதை, வங்காள மக்கள் ஏற்கவில்லை.

### வங்க மொழி இயக்கம் :

இதையடுத்து கிழக்கு பாகிஸ்தானில் தேசிய மொழியாக வங்க மொழியே வேண்டும் என்று 1952-ம் ஆண்டு பெப்ரவரி 21ம் தேதி 'வங்க மொழி இயக்கம்' உருவானது. இதையடுத்து வங்க மொழி இயக்கத்தைச் சார்ந்த மாணவர்கள், அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டனர். பொலிசாரின் நடவடிக்கையால், மாணவர்கள் 4 பேர் உயிரிழந்தனர். போராட்டம் தீவிரமாக பரவியது. அதன்பின் 1956ம் ஆண்டு, கிழக்கு பாகிஸ்தான் மொழியாக வங்க மொழி அறிவிக்கப்பட்டது. இதையடுத்து, தலைநகர் டாக்காவில் நடைபெற்ற போராட்டத்தில் உயிரிழந்தவர்களின் நினைவாக ஆண்டுதோறும், பெப்ரவரி 21ம் தேதியை உலக தாய்மொழிகள் தினமாகக் கடைபிடிக்க வேண்டும் என்கிற தீர்மானத்தை வங்க தேச அறிஞர் ரபீக்குல் இஸ்லாம் 1998ம் ஆண்டு யுனெஸ்கோவில் முன்மொழிந்தார். 2000ம் ஆண்டிலிருந்து, பெப்ரவரி 21ம் தேதி உலக தாய்மொழிகள் தினமாக கொண்டாடப்படுகிறது.

### வங்கம் பிறந்த வரலாறு:

இந்தியா-பாகிஸ்தான் என இரு நாடுகளாக 1947 ஆகஸ்ட் மாதத்தில்

பிரிந்தபோது, பாகிஸ்தானின் மொத்த மக்கள் தொகை 6.9 கோடி. இதில் 4.4 கோடிப் பேர் கிழக்குப் பாகிஸ்தானில் வசித்தனர். அவர்களின் தாய்மொழி வங்காளியாக இருந்த அதேநேரத்தில், மேற்கு பாகிஸ்தானில் இருந்த மக்கள் உருது, பஞ்சாபி, பஷ்தூ, சிந்தி ஆகிய மொழிகளைப் பேசுபவர்களாக இருந்தனர்.

கிழக்கிந்திய கம்பெனி, பிரிட்டிஷ் ஆட்சி என காலனிய ஆட்சியின் தலைமைப் பீடமாக வங்காளம் நீண்ட காலம் இருந்துவந்த நிலையில், இயற்கையாகவே கிழக்குப் பாகிஸ்தான் பகுதி பொருளாதார உற்பத்தி மட்டுமின்றி, கல்வி உட்படப் பல்வேறு சமூகத் தளங்களிலும் மேற்கு பாகிஸ்தானை விட வெகுவாக முன்னேறிய நிலையில் இருந்தது.

### மொழிப் போர் தியாகிகள் தினம்:

இந்தப் பின்னணியில் 1948 பெப்ரவரி 23 அன்று கூடிய பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபை, தனது உறுப்பினர்கள் உருது அல்லது ஆங்கிலத்தில் மட்டுமே பேசலாம் என முடிவெடுத்தது. இதை எதிர்த்த கிழக்கு பாகிஸ்தானைச் சேர்ந்த உறுப்பினர் திரேந்திரநாத் தத்தா 'வங்க மொழியையும் அதில் சேர்க்க வேண்டும்' என்று முன்மொழிந்தார். எனினும், அன்றைய பாகிஸ்தான் பிரதமர் லியாகத் அலி கான், கிழக்குப் பாகிஸ்தான் முதல்வர் க்வாஜா நசிமுதீன் உள்ளிட்ட பலரின் உதவியுடன் வங்க மொழிக்கு ஆதரவான தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது. இதற்கு எதிராக கிழக்கு பாகிஸ்தான் போர்க்கோலம் பூண்டது.

1948 மார்ச் 11-ல் பொது வேலைநிறுத்தம் நடைபெற்றது. மார்ச் 19-ல் பாகிஸ்தான் அதிபர் முகமது அலி ஜின்னா அரசுமுறைப் பயணமாக டாக்கா வந்து கலந்துகொண்ட இரண்டு நிகழ்ச்சிகளிலுமே, மக்களின் கடுமையான எதிர்ப்புக் குரல்களுக்கு இடையே,'பாகிஸ்தானின் அரசு மொழியாக உருது மட்டுமே இருக்கும்' எனத் திட்டவட்டமாகத் தெரிவித்தார். இதைத் தொடர்ந்து, அரசியல் மட்டத்தில் தொடங்கிய எதிர்ப்பு மாணவர்கள், இளைஞர்கள், அறிவுஜீவிகள் மத்தியிலும் வேகமாகப் பரவியது. இவ்வாறு தாய்மொழியான வங்க மொழிக்கு ஆதரவாக 1948-ல் தொடங்கிய இந்த இயக்கம் தொடர்ந்து வலுப்பெற்று 1952-ல் உச்சம் எய்தியது.




### டாக்கா மாணவர்களின் கிளர்ச்சி:

அந்த ஆண்டு பெப்ரவரி 21 அன்று டாக்கா மருத்துவக் கல்லூரி மாணவர்களின் கிளர்ச்சியை ஒடுக்க ராணுவம் நடத்திய தாக்குதலில் ரஃபீக் உதீன் அகமது, அப்துல் ஜப்பார், அப்துல் பரக்கத், அப்துல் சலாம் ஆகிய மருத்துவக் கல்லூரி மாணவர்களோடு, ஒன்பது வயதேயான ரஹியுல்லா என்ற சிறுவன் உட்பட ஐந்து பேர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கானோர் காயமுற்றனர்.

இவர்கள் உயிர்நீத்த அதே இடத்தில் பெப்ரவரி 23 அன்று தியாகிகள் நினைவுச் சின்னம் தற்காலிகமாக உருவானது. அன்றிலிருந்து ஒவ்வோர் ஆண்டும் அரசின் கடுமையான ஒடுக்குமுறைக்கு இடையே பெப்ரவரி 21ஐ மொழிப் போர் தியாகிகளின் தினமாக கிழக்கு பாகிஸ்தான் மக்கள் கடைப்பிடித்து வந்தனர்.

மக்களின் கடுமையான எதிர்ப்பினை அடுத்து 1956 பெப்ரவரி 16 அன்று பாகிஸ்தானின் அரசு மொழிகளில் ஒன்றாக வங்க மொழி ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனினும், மேற்கு பாகிஸ்தானின் ஆதிக்க உணர்வு







# வங்க தேசத்தின் மொழிப் போரும் ஈழத்தில் தனிச்சிங்களச் சட்டமும்!!

மங்கிவிடவில்லை. பொருளாதாரரீதியாகவும், சமூகரீதியாகவும் கிழக்கு பாகிஸ்தான் மக்களை ஒடுக்கவும், மதரீதியாக அவர்களைப் பிளவுபடுத்தவுமான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

கிழக்கு பாகிஸ்தான் மீதான, தொடர்ச்சியான புறக்கணிப்பை எதிர்த்துக் குரல் கொடுத்துவந்த அவாமி லீக் தலைவர் ஷேக் முஜிபுர் ரஹ்மான், அகர்தலா சதிவழக்கில் கைது செய்யப்பட்டு மேற்கு பாகிஸ்தானில் சிறை வைக்கப்பட்டார்.

1970 டிசம்பரில் நடைபெற்ற தேர்தலில் கிழக்கு பாகிஸ்தான் பகுதியின் மொத்தமுள்ள 169 இடங்களில் 167 இடங்களை அவாமி லீக் கட்சி கைப்பற்றி, ஆட்சியைப் பிடிக்கத் தகுதிபெற்றிருந்த நிலையில், "நாங்கள் ஆட்சியமைக்க வழிவிட வேண்டும் புதிய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்க வேண்டும் என்ற முஜிபுர் ரஹ்மானின் கோரிக்கையை பாகிஸ்தான் ராணுவம், பாகிஸ்தான் மக்கள் கட்சி தலைமை பூட்டோ அரசு கடுமையாக எதிர்த்தது.

**மொழிப் போரால் பிறந்த நாடு:**

இவ்வாறு தாய்மொழிக்காகத் தொடங்கிய போராட்டம் படிப்படியாக அரசியல்ரீதியாக வலுப்பெற்று, விடுதலைப் போராக உருமாறியது. இப்போரின்போது கிழக்கு பாகிஸ்தான் மக்களை அடக்கி ஒடுக்க பாகிஸ்தான் ராணுவப் படைகள் கட்டவிழ்த்துவிட்ட வன்முறை வெறியாட்டத்தில் முப்பது லட்சம் பேர் படுகொலை செய்யப்பட்டனர்; மூன்று லட்சம் பெண்கள் மிகக் கொடூரமான வகையில் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாயினர். கிழக்கு பாகிஸ்தானில் காலம்காலமாக இருந்து வந்த கட்டமைப்பு வசதிகள் முற்றிலுமாகத் துடைத்தெறியப்பட்டன.

ஒருவகையில், இதை இன ஒழிப்பு நடவடிக்கை என்றே கூறிவிடலாம். வங்கதேசம் உருவாகி 50 ஆண்டுகள் ஆனபிறகும் கூட இந்த இன ஒழிப்பு நடவடிக்கைக்கு பாகிஸ்தான் இன்றுவரை வருத்தம் தெரிவிக்கவில்லை என்பதோடு, இனப் படுகொலை குற்றவாளிகள் என்று அடையாளம் காணப்பட்ட 195 போர்க் குற்றவாளிகள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை.

இறுதியில், உலகிலேயே முதன்முறையாக ஒரு மொழியின் அடிப்படையில் வங்கதேசம் என்ற தனியொரு நாடு உருவாக வழி வகுத்தது. இந்தப் பின்னணியில் தான் தாய்மொழியின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் சர்வதேசக் கலாச்சார அமைப்பான யுனெஸ்கோ, வங்கதேசத்தின் மொழிப் போர் தொடங்கிய பெப்ரவரி 21-ஐ உலகத் தாய்மொழி நாளாக ஆண்டுதோறும் கொண்டாட வேண்டும் என 1999 நவம்பர் 17-ல் தீர்மானம் நிறைவேற்றியது. பின்பு, ஐக்கிய நாடுகள் சபையும் தனது உறுப்புநாடுகள் இதைக் கொண்டாட வேண்டுமென பொது அவையில் தீர்மானம் நிறைவேற்றியது.

ஒவ்வொரு தாய்மொழி நாளும் பெப்ரவரி 21 அன்று கொண்டாடப்படும் வேளையில், உலகத்துக்குச் சொல்லும் பாடம் ஒன்று தான். தேசிய இனங்களுக்கான உரிமைகளை, அவர்களது மொழி, பண்பாடு ஆகியவற்றை, ஒற்றை ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவரத் துடிக்கும் எந்தவொரு அரசும் இறுதியில் சிதறுண்டு போனதையே உலக வரலாறு நிரூபித்துள்ளது.



# அம்மா!!

அம்மா.!! உன்
கைகள் மெலிந்து
சுருங்கி விட்டதா...?
பட்டு போன்ற உன்
கரங்கள்
இப்படி சுருங்கி
விட்டதே!

அழகாக
என் தலை சீவி
பூவோடு பொட்டு
வைத்து
மடி மீது அமர்த்தி
திருஷ்டி சுற்றிய
கரங்களா இவை?

விதம் விதமாக.
ஆடைகள் தைத்து
அழகு பார்த்து,
பக்குவமாய் சமைத்து
பரிமாறி ஊட்டிய
உன் கரங்கள்
இன்று தளர்ந்து
போயுள்ளதா....?

எமக்காக
எம்கண்முன்னே
நீ பட்ட வலிகள்
காலத்திற்கும் மாறாது.

அம்மா.!!
உன் சுருக்கம்
நிறைந்த கைகளால்
தலை கோதி
மடி சாய்க்கும்
உன்அன்பில்
மெய் சிலிர்த்துப்
போகிறேன்.

உன் அன்பில்,
உன் தியாகத்தில்.,
உயர்ந்த மலர்கள்
நாங்கள்.
இனி
எமக்காக உழைத்த
உன் கரங்கள்
ஓய்வெடுக்கட்டும்!!
பெற்றவளைக்
குழந்தையாக்கி
குதூகலமாய்
பார்த்திடுவோம்!!

**அம்முக்குட்டி**



# திருமணத்திற்குப் பின் பெண்களின் தொழில் செய்யும் உரிமை!

திருமணதிற்குப்பின்னும் பெண் வேலைக்குப்போவதால்தான் குடும்ப உறவுகள் சீர்குலைகின்றன என்றும், குழந்தைகளுக்கு அன்பு கிடைக்காது அவர்கள் தவறான பாதைக்குக் கொண்டுசெல்லப்படுகிறார்கள் என்றும் சமுதாயம் நலிவுறுகிறதென்றும் நம்மில் பலர் நினைப்பதுண்டு. அவர்களது கூற்றுக்களில் உண்மை இல்லாமல் இல்லை. பிரச்சினைகள் எம்முன் உள்ளன. ஆனால் இவர்கள் பெண்களுக்கு முன் வைக்கும் தீர்வுகள் தான் இன்றைய காலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை. பரிசீலிக்கப்பட வேண்டியவை. பல ஆண்டுகளாக குடும்பம் சார்ந்த வேலைகளையே தனது கடமைகளாக செய்து வந்த பெண் சம அந்தஸ்துடன் குடும்பத்திற்கு அப்பால் உள்ள உலகத்திலுள்ளும் தனது பங்களிப்பை செய்யவிழையும் போது குடும்பம் பல பிரச்சினைகள் எதிர்நோக்கும்.

காலங்காலமாக பெண்களது கைகளில் இருந்த சமையறை குடும்பம் என்பன மற்றவர்களுக்கும் பங்கிடப்படும் போது, அவ்வேலைகளில் குறைபாடும் நேர்த்தியின்மையும் ஏற்படுவது தவிர்க்க முடியாது. அதுவே நிரந்தரமானதல்ல. அதற்கான தீர்வுகள் வைக்கப்பட்டு நடைமுறைக்கு வரும்போது பிரச்சினைகளும் மறைந்து போகும் இல்லையா? ஒழுக்கம், குழந்தை வளர்ப்பு, குடும்ப நலனில் அக்கறை, தியாகம், சேவை போன்றவையெல்லாம் ஒரு குடும்ப கட்டமைப்புக்கு தேவையானது என்றால் அது கணவனுக்கும் தேவையான ஒன்றே. ஒரு ஆண் இதையெல்லாம் செய்துகொண்டே தன் ஆளுமையையும், அறிவாற்றலையும், இன்னபல திறமைகளையும் வெளிப்படுத்திக்கொள்ளவும் மேன்மேலும் வளர்த்துக்கொள்ளவும்



மாலினி
கொட்டகலை
(இலங்கை)



உரிமை இருக்கும்போது ஒரு பெண்ணுக்கு அத்தகைய திறமைகள் இருப்பதில் என்ன தவறிருக்க முடியும்? எல்லா குடும்பங்களிலும் கணவன் தன மனைவின் ஆளுமைக்கும் சேர்த்தே செலவழிப்பான் என்றில்லையே? ஏனெனில் பல குடும்பங்களில் மனைவியின் அத்தியாவசிய தேவைகளுக்குக்கூட பணம் கொடுக்காத கணவர்கள் இருப்பதில்லையா?

ஒரு தாயினால்தான் தன் குழந்தையினை நன்கு பராமரிக்க முடியும் என்பது மறுக்கவியலாத உண்மைதான். அதில் எந்தவித மாற்றுக்கருத்துக்குமே இடமில்லை. ஆனால் எல்லாத் தாய்மார்களுக்கும் அந்த வாய்ப்பு அமைவதில்லையே? இதற்கு பெண் வேலையை விட்டு விடுவது மட்டும்தான் தீர்வாக இருக்க முடியுமா? நாம் ஏன் இதற்கான மாற்றுத்தீர்வுகளை யோசிக்கக்கூடாது? பிரச்சினைகள் அடையாளம்




காணப்பட்டு அதற்கான தீர்வுகள் முன்வைக் கப்பட வேண்டும் இல்லையா? பொதுவாகவே இலங்கையில் பிரசவத்திற்குப்பின் மூன்று மாதகால சம்பளத்துடன் கூடிய விடுமுறை நம் அனைவருக்குமே சட்டரீதியில் கிடைக் கக்கூடியது. ஆனால் ஒரு குழந்தைக்கு ஆறு மாதங்கள்வரை தாய்ப்பால் மட்டுமே கொடுக் கப்படவேண்டும் என்பது வைத்தியர்களின் பரிந்துரையாக இருக்கின்றபோது நம்முடைய தொழிலாளர் சட்டம் திருத்தி அமைக்கப்பட வேண்டிய ஒன்றாகவே இருக்கிறது.

இந்த மூன்றுமாதகால விடுமுறை கட்டாயம் ஆறுமாதகாலமாக மாற்றியமைக்கப்படவேண் டியது அவசியமான ஒன்றல்லவா? ஆறு மாதங்களுக்குப்பின் குழந்தையை பராமரிக்க பெண்ணின் தாயாரோ மாமியாரோ அல்லது சகோதரியோ யாரேனும் ஒரு மிகச் சிறந்த நபர் இருப்பாராயின் அவள் தன் உத்தியோகத்தை தொடர்வதில் சிக்கலென்ன? மேலும், ஒரு குழந்தையுடன் முழுநேரமும் அதன் பெற் றோர்கள் இருக்க வேண்டும் என்பது அவசி யமில்லை. குழந்தை வளர்ப்பினைப்பற்றிப் பேசும் பல மருத்துவர்கள் “spend quality time



” என்றுதான் குறிப்பிடுகிறார்களே ஒழிய முழு நேரமும் குழந்தையை சுற்றிச் சுற்றி வந்து சுயமாக அதனை எதையுமே செய்யவிடாது எல்லாவற்றுக்கும் உங்களையே எதிர்பார்க்கும் ஒன்றாக அதனை மாற்றிவிடாதீர்கள் என்கி றார்கள். நாம் குழந்தையுடன் செலவழிக்கும் நேரம் எத்தகைய தரமு டையது என்பது மிக மிக முக்கியமானது.

குழந்தையுடன் நேரம் செலவழிக்கிறேன் என்று சொல்லிக்கொண்டு, அதனோடு அமர்ந்து டிவி பார்க்க ஆரம்பிப்போமாயின் அது எப்படி சரியானதாகும்? ஏனெனில் அந்த நேரத்தில் நாம் குழந்தையுடன்தான் இருப்போமாயினும் அதன் ஆளுமையை வளர்க்கும் அல்லது அதன் மனோநிலையோடு ஒன்றிப்போகும் எந்தவொன்றையுமே நாம் அவ் விடத்தே செய்யவில்லையே? நமக்கு ஒரு நாளில் ஒரு மணிநேரம் தான் குழந்தையுடன் பகிர்ந்துகொள்ள முடியுமாயின் இடையிடையே குழந்தையோடு பேச்சுக்கொடுத்துக்கொண்டே மற்ற வேலைகளை செய்துகொண்டிராது அந்த ஒரு மணிநேரமும் குழந்தையோடு விளை யாட அல்லது நேருக்கு நேர் அமர்ந்துகொண்டு பிரமாண்டமான அபிநயங்களோடு கதைகளைக்கூற முழுமையாக அந்த நேரத்தினை அவர்களோடு பகிர்ந்துகொள்ளுவோமாயின் எந்தக்குழந்தையுமே சூழ்நிலையைப் புரிந்துகொள்ளும் இல்லையா?

வேலைக்குப்போகும் அம்மாக்கள் செய்யக்கூடாத இன்னொன் றையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய குழந் தையை சரியாக பார்த்துக்கொள்ள முடியவில்லை, அதனுடன் போது மான நேரத்தினை செலவிடமுடியவில்லை என்ற குற்றவுணர்ச்சி மேலோங்க, அது கேட்டதையெல்லாம் வாங்கிக்கொடுத்து அதை ஒரு வீணடிக்கப்பட்ட குழந்தையாக மாற்றிவிடாதீர் கள். பிறகு குழந்தையின் குளறுபடி தாளாமல் ‘உனக்காகத்தானே நான் வேலைக்குப் போகி றேன்’என சுயபச்சாபத்துடன் கெஞ்சுவீர்களே ஆயின்,‘நானா உன்னை வேலைக்குப் போகச் சொன்னேன்?’ என அது உங்களிடமே எதிர்க் கேள்வி கேட்க ஆரம்பித்துவிடும்.

இந்த தனி ரக அவஸ்தையை கெட்டிக்காரத் தனமாக கையாளக்கற்றுக்கொள்ளுங்கள். ஒரு போதும் தான் ஒதுக்கப்படுகிறோம், தன்னைக், கவனிக்க ஆளில்லை என்பதுபோன்ற எண் ணங்கள் குழந்தைகள் மனதில் வளரும் வகை யில் நேரமின்மை என்ற ஒன்றை காரணம் காட்டி அவர்களை கவனிக்கத் தவறாதீர்கள். இப்பிரச்சினை ஒரு சமுதாயப் பிரச்சினை. தனிப்பட்ட ஒவ்வொரு குடும்பத்தின் பிரச்சி னையாகக் கருத முடியாது. குடும்ப அமைப்புக



ளைப் பேணுவதற்கு, பெண்களை மீண்டும் வீட் டில் மட்டும் உழைப்பை வழங்குவதற்காக – அதாவது தனது குடும்பத்தைக் காக்கும் பணி பெண்ணினது அதற்காக அவள் வீட்டுக்குள் போயிருந்து வேலையைக் கவனிப்பதுதான் வழி – என்ற கருத்தை ஒருபோதும் ஏற்க முடியாது இல்லையா?

‘நான் நல்ல சம்பாத்தியத்தில் இருக்கி றேன், அதனால் என் மனைவி வேலைக் குப்போய்த்தான் சம்பாதிக்கவேண்டும் என்ற அவசியம் இங்கில்லை’ என்று கூறும் கண வர்கள் ஒரு ரகம் என்றால், ‘வேலைக்கு போய்

**“பெண்கள் வேலைக்குச் செல்லும்போது அவர்களுக்கு கிடைக்கும் பல வெளி உலக அனுபவங்களால் குடும்பத்தில் ஏற்படும் சில சிக்கல் களைக்கூட சமாளிக்கும் திறன் அவர்களுக்கு இயல்பாகவே ஏற்படுகிறது தம்முடைய அன்றாட வாழ்க்கையைப்பற்றி நன்றாகத் திட்டமிடக் கற்றுக்கொள்கிறார்கள். காலை முதல் இரவு நித்திரைக்குச் செல்லும்வரை ஒவ்வொரு வேலையையும் நன்கு திட்டமிட்டு அந்தந்த நேரத்தில் செய்துமுடிக்கவேண்டும் என்ற உத்வேகம் அவர்களுக்கு ஏற்பட்டு அவ்வாறே செய்து முடிக்கும் ஆற்றல் வளர்கிறது. இதனால் திட்டமிடுதல் சுறுசுறுப்பாக செயற்படுத்தல், தன் வேலைகளை விரைந்து முடிக்க சிந்தித்தல் போன்ற சிறப்புக்கள் அவர்களிடம் உருவாகும்.”**



சம்பாதிப்பதால்தானே இந்த திமிர் அந்த வேலை இல்லாவிட்டால் என்னையும் என் குடும்பத்தையும் இவள் மதிப்பாள்' என்ற குரூர நோக்கில் மனைவிக்கு தடை சொல்லும் கணவர்கள் இன்னொரு ரகம். 'நீ ஏன் இன்னும் வேலைக்குப் போய் கஷ்டப் படணும்? நிம்மதியா வீட்ல இருந்து வேலை செஞ்சிட்டு டிவி பார்த்துகிட்டு இருக்க லாமே?' என்பது அன்பார்ந்த இன்னுமோர் ரகம். [இதனால்தானோ என்னவோ, லட்சக் கணக்கில் சம்பாதிக்கும் ஆண்களைக்காட் டிலும் திறமையான பல பெண்கள் சன் டிவி, விஜய் டிவி, zee தமிழ் போன்றவற்றில் புதைந்துபோய் கிடக்கிறார்கள்.]

இன்னும் சிலர் இருக்கின்றனர்.'ஏன் அலுவலகம் போய்த்தான் ஆத்ம திருப்தி அடைய வேண்டுமா? வீட்டுக்குள்ளேயே இருந்து கூடை பின்னுதல், எம்பிராய்டரி, பூ வேலைப்பாடு செய்தல்,தையல் வேலை செய்தல், வானம், பூ, நிலா, பெண்மை என விதவிதமான தலைப்புக்களில் கவிதையெ ழுதி வாரப்பத்திரிகைகளுக்கு அனுப்பி வைத்தல் போன்ற வேலைகளை செய்து தனது சுயம் அழியாமல் பார்த்துக்கொள்ளக் கூடாதா?' என்பதுபோன்ற கேள்விகளை எழுப்புவது எரிச்சலுக்குரியது.

அப்படியே வேலையை விடுவதா வேண் டாமா என்ற குழப்பத்தில் உறவினர்களி டமோ நண்பர்களிடமோ விடயத்தை பகிர்ந் துகொண்டால்,'வேலையா குடும்பமான்னு பார்த்தா குடும்பம்தான் முக்கியம் பேசாம புருஷன் சொல்றத கேட்டு புத்திசாலித்த னமா வாழ்க்கையை காப்பாத்திக்க' என்ற அறிவுரைதான் அதிகமாக வந்து சேரும்.

ஆனால், இவர்கள் எல்லோருமே ஒன்றை மறந்துவிடுகிறார்கள். பெண்கள் வேலைக் குச் செல்வது சம்பாத்தியம் தொடர்பானது மட்டுமல்ல. அது அவளுக்கு தன்னம் பிக்கையை தருகிறது. தன் குடும்பத்தின் பொருளாதார தேவைகளைத் தன்னாலும் பகிர்ந்துகொள்ள முடிகிறது என்ற மன நிறைவினைத் தருகிறது. சமையல், வீட்டு வேலை என்று தன்னுடைய திறமை களை நான்கு சுவருக்குள்ளேயே முடக் கிக்கொள்ளாமல், அவற்றை வெளிப்படுத்த உதவுகிறது. சுய மரியாதையைக் கொடுக்கி றது, மண வாழ்வில் ஏதேனும் சந்தர்ப்பத்தில் குடும்பத்தை தனியாளாக சமாளிக்க நேரின் குறைந்த பட்சம் பொருளாதார பிரச்சினையி லிருந்தாவது தப்பிக்க முடிகிறது.

**காலங்காலமாக பெண்களது கைகளில் இருந்த சமையறை குடும்பம் என்பன மற்றவர்களுக்கும் பங்கிடப்படும் போது, அவ்வேலைகளில் குறைபாடும் நேர்த்தியின்மையும் ஏற்படுவது தவிர்க்க முடியாது. அதுவே நிரந்தரமானதல்ல. அதற்கான தீர்வுகள் வைக்கப்பட்டு நடைமுறைக்கு வரும்போது பிரச்சினைகளும் மறைந்து போகும் இல்லையா? ஒழுக்கம், குழந்தை வளர்ப்பு, குடும்ப நலனில் அக்கறை, தியாகம், சேவை போன்றவையெல் லாம் ஒரு குடும்ப கட்டமைப்புக்கு தேவையானது என்றால் அது கணவனுக்கும் தேவையான ஒன்றே.**

பெண்கள் வேலைக்குச் செல்லும்போது அவர்களுக்கு கிடைக்கும் பல வெளி உலக அனுபவங்களால் குடும்பத்தில் ஏற்படும் சில சிக்கல்களைக்கூட சமாளிக்கும் திறன் அவர்க ளுக்கு இயல்பாகவே ஏற்படுகிறது தம்முடைய அன்றாட வாழ்க்கையைப்பற்றி நன்றாகத் திட் டமிடக் கற்றுக்கொள்கிறார்கள். காலை முதல் இரவு நித்திரைக்குச் செல்லும்வரை ஒவ்வொரு வேலையையும் நன்கு திட்டமிட்டு அந்தந்த நேரத்தில் செய்துமுடிக்கவேண்டும் என்ற உத் வேகம் அவர்களுக்கு ஏற்பட்டு அவ்வாறே செய்து முடிக்கும் ஆற்றல் வளர்கிறது. இதனால் திட்டமி டுதல் சுறுசுறுப்பாக செயற்படுத்தல், தன் வேலை களை விரைந்து முடிக்க சிந்தித்தல் போன்ற சிறப்புக்கள் அவர்களிடம் உருவாகும்.

நெருக்கடியான நேரங்களில் விரைந்து செயற் பட, தகவல் தொடர்பு கொள்ளும் முறைமை மாற்றுவழிமுறைகளை தேர்ந்தெடுத்தல் என பல பண்புகள் இயல்பாகவே இவர்களிடம் ஏற்படும். வேலை பார்க்குமிடத்தில் பலதரப்பட்ட பணியாளர் களுடன் பழக நேருவதால்,குழு மனப்பான்மை, விட்டுக்கொடுத்தல், அனுசரித்தல், வெவ்வேறு குணாதிசயங்களுடன் கூடிய மனிதர்களை சந் திக்க நேருகையில் ஒவ்வொருவரிடமும் எப்படி பழக வேண்டும் என்ற பக்குவம் போன்றனவெல் லாம் ஒவ்வொரு பெண்ணுக்கும் ஏற்படுகிறது.

குடும்பத்தின் பொருளாதாரத் தேவைக்காக இல்லாமல் படித்த படிப்பு வீணாகக்கூடாதே




என்று பணிக்கு செல்லும் பெண்களைக் கேளுங் கள் வேலையை விடுவார்களா என்று? நிச்சயம் மாட்டார்கள். 'அலுவலகத்திலும் நிமிரமுடியாத அளவுக்கு வேலை வீட்டிலும் வேலை, நேரமே இல்லை' என ஆயிரம்தான் புலம்பினாலும் வேலையை விடமாட்டார்கள். ஏன்? வேலைக்கு போகவேண்டும் என்ற கட்டாயமும் அவர்களுக்கு இருப்பதில்லை. ஆனாலும் வேலையைக் கைவி டமாட்டார்கள். 'அலுவலகம் சென்றால் ஒரே வேலை, வீட்டில் இருந்தால் ஆயிரம் வேலை' என நகைச்சுவையாகக்கூட சிலர் சொல்வதைக் கேட்டதுண்டு.

சில பெண்களுக்கு வேலையை விட சுய கௌரவம் தடுக்கிறது. அதுமட்டுமன்றி தானா கவே உருவாக்கிவிட்டுக்கொண்ட பொருளாதார நிர்பந்தங்கள் அவர்களுக்கு எந்தவித வழிவகை யையும் கொடுப்பதில்லை. வீட்டில் அலுவலக சிந்தனை அலுவலக வீட்டு சிந்தனை என குழம்பிக்கொண்டிருக்கும் பெண்களும் இல்லா மலில்லை. எது எவ்வாறாயினும் வேலைக்கு போவதும் போகாததும் பெண்களைப் பொறுத்த தாக இருக்கவேண்டும். இதில் ஆண்கள் தலையி டக்கூடாது. விரும்பி வேலைக்கு போகும் எந்தப் பெண்ணும் அதை பாரமாக நினைக்கமாட்டாள். எனவே, அப்படிப்பட்ட பெண்ணுக்கு கணவர் ஏன் தடையிடுவான்?

# சே குவேரா

## அங்கம்: 03



காஸ்ட்ரோவை விட்டுப் பிரிவதற்கு முன் ‘சே’ எழுதிய கடிதத்தை ஒரு பொதுக் கூட்டத்தில் காஸ்ட்ரோ படித்தார். அதில் என்னை கியூபாவின் புரட்சியுடன் தொடர்புபடுத்திய கடமை முடிந்துவிட்டது. அந்தக் கடமையை நான் செவ்வனே முடித்து விட்டேன். உங்களிடமும், மற்றப் போராளிகளிடமும், என்னுடைய மக்கள் ஆகிவிட்ட கீயூபன் மக்களிடமும் நான் விடை பெறு கிறேன் என்று எழுதியிருந்தார்.

1966ம் ஆண்டு மார்ச் மாதம் காங்கோவை விட்டு வெளியேறும் சூழ்நிலை ஏற்பட்டது. மார்ச் முதல் ஜூன் வரையிலான கால கட்டத்தில் உருகுவே, பிரேஸில், பராகுவே, அர்ஜெண்டைனா, பொலி வியா நாடுகளில் பயணம் செய்தார் சே குவேரா. 1966ம் ஆண்டின் கடைசிகளில் கொரில்லாப் போரை வழி நடத்தும் பொருட்டு உருகுவே நாட்டு போலி பாஸ்போர்ட்டுடன் பொலிவியா நாட்டுக் குள் நுழைந்தார். பல காரணங்களால் பொலிவியா நாட்டைத் தேர்ந்தெடுத்தார் என்று நம்பப்படுகிறது. அமெரிக்கா பொலிவியாவைவிடவும் கரிப்பியன் தீவு நாடுகளே தங்கள் பாதுகாப்பிற்கு பங்கம் விளைவிக் கக்கூடும் என்று நம்பியதும், அதனால் அமெரிக்கா வின் பார்வை பொலிவியா மீது அவ்வளவு தீர்க்கமாக விழவில்லை என்பதும் ஒரு காரணம். .

இரண்டாவதாக பொலிவியாவின் ஏழ்மையும், அங்கு நிலவிய சமூக மற்றும் பொருளாதார நிலை களும் எந்நேரமும் அங்கு புரட்சி வெடிக்க சாதகமாக இருந்தது . மூன்றாவதாக பொலிவியா ஐந்து பிற நாடுகளுடன் தன் எல்லையை பகிர்ந்து கொண்டி ருந்தது . பொலிவியாவில் கொரில்லாப் போராட்டம் வெற்றி பெறுமேயானால் அதை மற்ற ஐந்து நாடு களுக்கும் பரவச் செய்துவிடலாம் என்று குவேரா நினைத்தது.

பொலிவியாவில் நடந்த கொரில்லாப் புரட்சியின் போது பொலிவியக் காடுகளில் பதுங்கி இருந்தார் சே. தட்பவெப்ப சூழ்நிலைகளின் முரண், கலாசாரப் புரிதலின்மை போன்றவையே அவரது திட்டங்களின் தோல்விகளுக்குக் காரணமாக அமைந்தன.

இன்னொரு பக்கம், அவர் யார் யாரை தன் அர சியல் நண்பர்களாக நம்பி இருந்தாரோ, அவர்கள் யாரும் உதவி செய்யாமல், மௌனமாகக் கைகட்டி வேடிக்கை பார்த்தார்கள். தோல்விக்கான முக்கி யமான காரணங்களில் இதுவும் ஒன்று. மனவேத னையுடன் ஆஸ்துமாவும் சேர்ந்து சே குவேராவை வாட்டி வதைத்தன. போதிய வீரர்கள் இல்லாமை மற்றும் உணவின்மை போன்ற பிரச்னைகளுடன் ‘சே’ காடுகளில் அலைந்தார். சி.ஐ.ஏ. பொலிவியா வுக்குள்ளும் புகுந்தது.

1967 அக்டோபர் 8 தென் அமெரிக்கச் சரித்திரத் தில் ஓர் இருண்ட தினம்.காலை 10.30 யூரோ கண வாயை ஆறு கெரில்லா வீரர்களுடன் ‘சே’ கடந்து செல்கிறார். வழியில் தென்பட்ட ஆடு மேய்க்கும் குண்டுப் பெண்ணின் மேல் பரிதாபப்பட்டு ஐம்பது பெஸோக்களைப் பரிசாகத் தருகிறார்.

நண்பகல் 1.30 அந்தக் குண்டுப் பெண் பொலிவிய ராணுவத்துக்கு ‘சே’வின் இருப்பிடத்தைக் காட்டிக் கொடுக்கிறாள். அலறிப் புடைத்துப் பறந்து வந்த பொலிவிய ராணுவம் சுற்றி வளைத்துச் சரமாரியாகச் சுடத் தொடங்குகிறது. பதிலுக்கு கெரில்லாக்களும்




துப்பாக்கியால் சுடுகின்றனர். பிற்பகல் 3.30 காலில் குண்டடிபட்ட நிலையில், தன்னைச் சுற்றித் துப்பாக்கியுடன் சூழ்ந்த பொலிவிய ராணுவத்திடம், "நான்தான் 'சே'. நான் இறப்பதைக் காட்டிலும், உயிரு டன் பிடிப்பது உங்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும்' என்கிறார்.

மாலை 5.30 அருகிலிருந்த லா ஹிகுவே ராவுக்கு வீரர்கள் கைத்தாங்கலாக 'சே'வை அழைத்து வருகின்றனர். அங்கிருக்கும் பழைய பள்ளிக்கூடம் ஒன்றில் 'சே' கைகால் கள் கட்டப்பட்ட நிலையில் சிறைவைக்கப் படுகிறார்.

இரவு 7.00 'சே பிடிபட்டார்' என சி.ஐ.ஏவுக்குத் தகவல் பறக்கிறது. அதே சமயம், 'சே' உயிருடன் இருக்கும் போதே இறந்துவிட்டதாகப் பொய்யான தகவல் பொலிவிய ராணுவத்தால் பரப்பப்படுகிறது.

தனக்கு உணவு வழங்க வந்த பள்ளி ஆசிரியையிடம், 'இது என்ன இடம்?' என்று 'சே' கேட்கிறார். பள்ளிக்கூடம் என அந்தப் பெண் கூற, "பள்ளிக்கூடமா ஏன் இத்தனை அழுக்காக இருக்கிறது?' என வருத்தப்படுகிறார். சாவின் விளிம்பிலும் 'சே'வின் இதயத்தை எண்ணி அப்பெண் வியந்து போகிறாள்.

அக்டோபர் 9 அதிகாலை 6.00 லா ஹிகுவேராவின் பள்ளிக்கூட வளாகத் தில் ஒரு ஹெலிகாப்டர் வட்டமடித்த படி வந்து இறங்குகிறது. அதிலிருந்து சக்திவாய்ந்த ரேடியோ மற்றும் கேம ராக்களுடன் ஃபெலிக்ஸ் ரோட்ரிக்ஸ் எனும் சி.ஐ.ஏ. உளவாளி இறங்குகிறார். கசங்கிய பச்சைக் காகிதம் போல கைகால் கள் கட்டப்பட்ட நிலையில், அழுக்கடைந்த ஆடைகளுடன் 'சே'வைப் பார்த்ததும், அவ ருக்கு அதிர்ச்சி. அமெரிக்காவுக்குச் சிம்ம சொப்பனமாக இருந்த ஒரு மாவீரனா இந் தக் கோலத்தில் இங்கே நாம் காண்பது கனவா என நினைத்தார். பிடிபட்டிருப்பது 'சே'தான் என அமெரிக்காவுக்குத் தகவல் பறக்கிறது. 'சே'வின் டைரிகள் மற்றும் உடைமைகள் கைப்பற்றப்படுகின்றன. தான் கொண்டுவந்த கேமராவில் 'சே'வை பல கோணங்களில் புகைப் படங்கள் எடுக்கி



றார் ஃபெலிக்ஸ். கைவிடப்பட்ட ஏசு கிறிஸ் துவைப் போலக் காட்சி தரும் 'சே'வின் அப் புகைப்படங்கள் இன்றளவும் வரலாற்றின் மிச்சங்கள்.

காலை 10.00 'சே'வை உயிருடன் வைத் துக்கொண்டு விசாரணை நடத்தினால், அது உலகம் முழுக்க அவர் மேல் பரிதா பத்தையும், நாயகத் தன்மையையும் உரு வாக்கிவிடும் என்பதால், அவரை உடனடி யாகத் தீர்த்துக்கட்டி விடுவதுதான் சரி என சி.ஐ.ஏவிடம் இருந்து தகவல் வருகிறது.

வாலேகிராண்டாவில் இருந்து வந்த அத்தகவல் 500, 600 எனக் குறிச்சொற் கள் தாங்கி வருகிறது. 500 என்றால் 'சே' 600 என்றால் கொல் என்பவை அதன் அர்த்தங்கள்.

காலை 11.00 'சே'வைச் சுட்டுக் கொல் வது என முடிவெடுக்கப்படுகிறது. யார் அதைச் செய்வது எனக் கேள்வி வருகி றது. 'மரியோ ஜேமி' என்னும் பொலிவிய ராணுவ சர்ஜன் அக்காரியத்துக்காகப் பணி அமர்த்தப்படுகிறார். நண்பகல் 1.00 கைகள் கட் டப்பட்ட நிலையில், 'சே'வை பள்ளிக்கூடத்தின் மற்றொரு தனியிடத்துக்கு மரியோ அழைத்துச் செல்கிறார். "முட்டி போட்டு உயிர் வாழ்வதைவிட நின்று கொண்டே சாவது எவ்வளவோ மேல்!' என் பார் 'சே'. ஆனால், மரியோ அவரை ஒரு கோழை யைப் போலக் கொல்லத் தயாராகிறார்.

தன்னை நிற்க வைத்துச் சுடுமாறு 'சே' கேட்க, அதை அலட்சியப்படுத்தினார் அவர்.

'கோழையே, சுடு! நீ சுடுவது 'சே குவேரா' வை அல்ல, ஒரு சாதாரண மனிதனைத்தான்!'

இதயம் கிழிக்கும் விழிகள் மின்ன, உலகம் புகழும் மனிதன் சொன்ன கடைசி வாசகம் இது தான்!

மணி 1.10. மனித குல விடுதலைக்காகத் தன் வாழ்நாளெல்லாம் போராடிய மாமனிதனை நோக்கி துப்பாக்கி திறக்கிறது. ஒன்பது தோட்டாக் களில் ஒன்று, சேயின் இதயத்தை ஊடுருவிக் கடந்தது. இனம், மொழி, தேசம் என எல்லைகள் கடந்து பாடுபட்ட உலகின் ஒரே வீரன் விடை பெற்றான்.

அக்டோபர் 18 கியூபா, ஹவானா-வில் வரலாறு காணாத கூட்டம் 'சே'வின் அஞ்சலிக்காக காஸ்ட் ரோவின் தலைமையில் கூடியிருந்தது. அவர்கள் முன் தலைமை உரையாற்றுகிறார் காஸ்ட்ரோ.

'வரலாற்றின் மகத்தான பக்கங்களில் இடம் பெற்றுவிட்ட 'சே' நம் காலத்தின் ஒப்பற்ற தலை வர். கியூபா மக்கள் அந்த மகத்தான தலைவனை முன்மாதிரியாகக் கொண்டு செயல்பட வேண்டும்'

என வேண்டுகோள் விடுக்கிறார்.

எது எப்படி ஆயினும் சே குவேராவை இன்றும் போற்றும் மக்கள் அவரைப்பற்றி இழிவாக வெளி வரும் செய்திகளை முற்றிலுமாகப் புறக்கணிக் கிறார்கள் என்பதே உண்மை. சே குவேராவின் சிந்தனையும் இலட்சியங்களும் இன்றைக்கும் சிறந்தவையாக கருதபடுகிறது..

'சே' இந்த யுகத்தின்பன்னாட்டு விடுதலைக் காகப் போராடிய ஒரு உன்னத போராளியாகத் திகழ்கின்றார்.

**முற்றும்**





# ஆரோக்கிய வாழ்வு!

ஒருவர் எத்தனை ஆண்டுகளில் இறப்பார் எனத் துல்லியமாக தெரியவேண்டுமெனில், அவரை கீழே உட்கார்ந்து எழுந்திருக்கச் சொல்லுங்கள். கீழே உட்கார்ந்து எந்தப் பிடிமானமும் இல்லாமல், தரையில் கையோ, காலோ ஊன்றாமல் எழுந்திருக்க முடிந்தால், அவருக்கு ஆயுசு நூறு.

தரையில் இரண்டு கைகளையும் ஊன்றி, அப்போதும் எழுந்திருக்க முடியாமல் உதவிக்கு ஒருவரோ,இருவரோவந்து கையைப் பிடித்து எழுப்பி விடும் நிலையில் இருந்தால் உடனே வக்கீலை வரவழைத்து உயிலை எழுதிவிடலாம்.

'ஜெரென்டாலஜி' துறை ஆய்வு ஒன்றில் முதியவர்களைக் கீழே அமரவைத்து, எழ வைத்து ஆய்வு செய்தார்கள்.கை, முட்டிஎன எதுவும் தரையில் படாமல் எழுந்தால் 0 புள்ளி.ஒரு கை ஊன்றி எழுந்தால் 1 புள்ளி. இரு கைகளையும் ஊன்றி எழுந்தால் 2 புள்ளிகள்.

இப்படி அவர்களின் உட்காரும் உடற்பயிற்சியைக் கணக்கிட்டு, அதன்பின் அவர்களை ஆண்டுக்கணக்கில் அவதானித்ததில் தெரிந்த விஷயம் இது.

புள்ளிகளின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க மரண அபாயம் ஒவ்வொரு புள்ளிக்கும் 21% ஆகக் கூடுகிறது என்பதுதான் அவர்கள் கண்டுபிடித்த அதிர்ச்சியான விடயம்.

கீழே சம்மணம் போட்டு உட்காரும் முறை யோகாசனத்தில் சுகாசனம் என அழைக்கப்படுகிறது.இந்தியா, சீனா, ஜப்பான் என கிழக்காசிய நாடுகள் எங்கிலும் சுகாசன முறையில்தான் மக்கள் உட்கார்ந்து எழுகிறார்கள்.

செருப்பு போடாமல் வீட்டுக்குள் வர சொல்வதற்கான காரணம் கூட வீடுகளின் தரையில் மக்கள் உட்கார்வார்கள் என்பதற்காகத் தான்.

கீழே உட்காருவது நாகரீகக் குறைவு என கருதிஆயிரக்கணக்கில் விலை கொடுத்து சோபா, சேர்களை வாங்கி முதுகுவலி, மூட்டுவலியை விலைகொடுத்து வாங்கி வைத்திருக்கிறோம் நாங்கள்.சோபா, சேரில் நீண்டநேரம் உட்கார்ந்து எழுந்தால் முதலில் வருவது கால் மரத்து போன உணர்வு. அடுத்து பின்புறவலி. காரணம், சோபாவில் உட்காருவதால் பின்புறத் தசைகளுக்கு வேலையே கிடையாது. பின்புறத்தசைகள் இப்படி செயற்பாடின்றி இருப்பது தான் முதுகுவலி, மூட்டுவலி என அனைத்துக்கும் காரணம் என்கிறார்கள் மருத்துவர்கள். கீழே உட்கார்ந்து எழும் சமூகங்களில், வயதானவர்கள் கீழே விழுந்து கையைக் காலை முறித்துக்கொள்ளும் அபாயம் துளியும் இல்லை என்கின்றன ஆய்வுகள். காரணம், அவர்கள் வாழ்வதே தரையில் தான்.





# ஆரோக்கிய வாழ்வு!

கீழே படுத்து, உட்கார்ந்து எழும் அவர்களுக்கு உதவும் தசைகளும், எலும்புகளும் அத்தனை வலுவாகி விடுகின்றன.


ஆனால், சோபா, மெத்தையில் படுத்து பாதம் மட்டுமே தரையில் படும்படி வாழும் நாகரீக சமூக முதியவர்களுக்கு வயதான பின் இருக்கும் மிகப்பெரும் ஆபத்து கீழே விழுவது தான்.

'ஆஸ்டியோ பெரோசிஸ்' உள்ளிட்ட எலும்பு குறைபாடுகள் பலவும் தொடர்ந்து உட்கார்வதால் வருகின்றன எனச் சொல்லுகின்றன ஆய்வுகள். சுகாசன முறையில் சம்மணம் போட்டு அமர்ந்து உண்பதும், புழங்குவதும் நம் ஆயுளைக் கூட்டி முதுகுத்தண்டுக் குறைபாடுகளைப் போக்கி, பின்புறத்தையும் முதுகுத் தண்டையும் மூட்டுக்களையும் வலுவாக்குகின்றன.

அதனால் இதுநாள் வரை கீழே உட்கார்ந்தது இல்லை எனில், இனிமேலாவது தரையில் உட்கார்ந்து பழகுங்கள். அப்படி உட்கார்கையில் முட்டி அந்தரத்தில் தொங்குவது போல உயரமாக இருந்தால், அவ்வப்போது கையை வைத்து மெதுவாக கீழே அமுக்கி விடுங்கள்.

இது காலின் 'அடக்டர்' (Adductor Muscle) தசைகளை நெகிழ்வு (Flexible) ஆக்கி,அவர்களின் தோரணையை (Posture) சரி செய்யும். சம்மணமிட்டு அமர்வதையும், உணவு உண்பதையும், நம் நல்ல பழக்கமாக்கி, நம் ஆயுளையும், ஆரோக்கியத்தையும் மேம்படுத்திக் கொள்வோம். இதற்கு வேறு எந்த உபகரணமோ, பணமோ, பயிற்சியோ கூடுதல் நேரமோ தேவை இல்லை. இதை நாம் மனதில் நிறுத்தி கிழே சம்மணமிட்டு அமரும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டால் மட்டும் போதும்.

சுகாசனம் செய்வோம், சுகமாக இருப்போம்.





# தாய்!!

*'தாய்' என்ற சொல்லுக்கே*
*தாயானவளே!*
*தாயுமான அண்ணனைத் தமிழ்*
*நோய் தீர்க்க ஈன்ற அன்னையே!!*

*தமிழினத்தின் துயர் களைய*
*இடுப்பு வலி சுமந்தவளே!*
*தலைவனைப் பெற்றதனால்*
*தனிமை வலி சுமந்தவளே!!*

*பாரே இங்கு உனக்காயிருக்க..*
*யாருமற்றவளாய்*
*தனிமைச்சிறையில்*
*கண்ணீரில் வாழ்ந்தாயே!!*

*அம்மா!*
*கொஞ்சம் நீ பொறம்மா!*
*நீ பட்ட துன்பங்களின்*
*விதைப்பில்*
*தீ சிந்திய உன் கண்ணீரின்*
*வெடிப்பில்*
*எம் தேசம் விடியும்*
*நாளை!!*

*பூமியை மிஞ்சிய*
*பொறைமிகு பூமகளே!*
*பூத்து மலர வா தாயே*
*மீண்டும் நீ!*
*பூபாளம் பாடும்*
*விடியும் காலையில்*
*பூமி புகழ் மைந்தனை*
*மீளப் புறந்தந்து*
*பூத்திடும் ஈழத்தில்*
*கொற்றவளாய் மகிழ்ந்தாடு!!*

**தாயகி**

# உணவு அரசியலின் பின்னணி!

'உணவே மருந்து' எனும் பாரம்பரியத்தினைக்கொண்ட சமூகம் நம்முடையது. ஆனால் தற்போது அந்த உணவே விஷமாகிக்கொண்டிருக்கின்றது என்பதுதான் உண்மை. இதற்கு என்ன காரணம்? இதன் பின்னணியில் இருக்கும் உணவு அரசியல் என்ன? 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல்பவர்' என்கிற வள்ளுவனின் வாக்குப்போல் உழவன் தலைநிமிர்ந்து நின்றகாலம்போய், உழவுத்தொழில் மழுங்கடிக்கப்பட்டு அல்லது மறக்கப்பட்டு வணிகத்தின் பின்னால் சுழன்றுகொண்டிருந்த நமக்கு, தற்போதைய இலங்கையின் நிலை உணவு உற்பத்தி பற்றியெல்லாம் கொஞ்சம் சிந்திக்கத்தான் செய்திருக்கின்றது.

இலங்கைத் தீவில் செயற்கையாக தயாரிக்கப்படும் உரங்களை நம்பியே தேயிலை உற்பட அனைத்து விவசாயமும் நடைபெறுகிறது . நாட்டின் மொத்த இறக்குமதியில் இந்த செயற்கை உரங்களின் இறக்குமதியும் பாரிய பங்களிப்பைச் செய்கிறதெனலாம். தற்போது ஏற்பட்டுள்ள நிதிப்பற்றாக்குறையினால் எந்தெந்த இறக்குமதியில் எல்லாம் கை வைக்கலாம் என சிந்தித்த இலங்கை அரசு இந்த செயற்கை உரங்களின் இறக்குமதியிலும் கைவைத்தது.

'இயற்கை உரங்களை நம்பி இனி விவசாயம் செய்வோம்'





எனும் கருத்து பரவலாக பேசப்பட்டு வருகிறது . இது நல்ல விடயம்தான். ஆனால் , அவசர உலகில் இது சாத்தியப்படுமா? ஏனெனில் அதுவொரு நீண்டகாலத் திட்டமாக அமையவேண்டிய ஒரு செயன்முறை. தமிழ்த் திரைப்படங்களில் வரும் ஒரேயொரு பாடலிலேயே பணக்காரராக மாறும் பார்முலாவோ அல்லது ஒரே இரவில் நடந்துவிடும் மேஜிக்கோ அல்ல.

இயற்கை உரங்களை உற்பத்தி செய்வதற்கான திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளை இலங்கை அரசு முதலில் நடைமுறைப்படுத்தவேண்டும். அதன் உற்பத்தியாளர்களுக்கு மானியங்கள் மற்றும் பயிற்சிகளை வழங்கவேண்டும். அதைவிடுத்து ஒரு நீண்டகாலமாக நடைமுறைப்படுத்தப்பட்டுவந்த ஒரு முறைமையான செயற்கை உரங்களை நம்பியே விவசாயம் செய்துபழகியபின், அதனைச் சடுதியாகத் தடைசெய்வதென்பது. பதுக்கிவைத்தல், அதிக விலையேற்றம், விளைச்சலின்மை விவசாயிகள் நட்டமடைதல் மற்றும் அவர்களின் கடன் சுமை என இனி விவசாயமே வேண்டாம் எனும் அளவிற்கு மனஉளைச்சல் உட்பட பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்தும் ஒன்று.

படிப்படியான மாற்றங்களை செயற்படுத்த முன்வருவதே ஒரு நல்ல ஆட்சியாளர்களிற்கு அழகு. ஆனால், தற்போது இவர்கள் போட்டிருக்கும் ‘சடன் பிரேக்’ நாட்டின் விவசாயத்தை எந்த அளவிற்கு அதல பாதாளத்திற்கு கொண்டுசென்றதென்பதை வருட ஆரம்பத்தில் பார்த்தோமல்லவா?

நாட்டின் பொருளாதாரப் பிரச்சினையினை மையப்படுத்தி இந்த நாட்டின் ஆளும்கட்சி உறுப்பினரொருவர் இனி இலங்கை மக்கள் தம்முடைய ஒருவேளை உணவினை தியாகம்செய்துவிட்டு

> **விவசாயப் பொருட்கள் மீது தெளிக்கப்படும் பூச்சி மருந்துகள் எவ்வளவுதான் மழை பெய்தாலும் எவ்வளவுதான் கழுவி எடுத்தாலும் அந்தக் கிருமிநாசினிகளின் எச்சங்கள் முழுதுமாக அகன்றுவிடுவதில்லை. காலப்போக்கில் கண்ணுக்குத் தெரியும் அளவில் அவை மாறிப்போயின. உதாரணம் நாம் உண்ணும் திராட்சை போன்ற பழங்களில் படிந்திருக்கும் வெள்ளைநிறமான படிமம் பூச்சிக்கொல்லிகளின் எச்சம் என்பது நம்மில் எத்தனை பேருக்கு தெரிந்திருக்கும்?**

இரண்டுவேளைகள் மட்டுமே உணவு உண்ணவேண்டும் எனக்கூறிய கருத்து சமூகவலைத் தளமெங்கும் வைரலாகி, பொதுமக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியது நினைவிருக்கலாம் .

ஆட்சிக்கு வருபவர்கள் ஒரு சிறந்த வாழ்வாதாரத்தினைக் கட்டி எழுப்புவார்கள் என்கிற நம்பிக்கையிலேயே, ஒவ்வொரு குடிமகனும் வாக்களித்துக்கொண்டிருக்கின்றோம். ஆனால், ஆட்சிக்குவந்தபின் அவர்கள் மக்களைப்பற்றி யோசிக்காமல் பொறுப்பற்ற ரீதியில் கூறும் கருத்துக்களும் எடுக்கும் முடிவுகளும் வாக்காளர்களை ஓர் அயர்ச்சி நிலைக்கு தள்ளிவிடுகின்றது எனலாம். ஒருவரது உணவைச் சுருக்கிக்கொள்ளவேண்டும் என யாரும் கட்டளை இடுவதென்பது என்னைப் பொறுத்தவரையில் ஒருவித அடிப்படை மனிதஉரிமை மீறலே.

பொருட்களுக்குத் தட்டுப்பாடா? அதற்கான மாற்றுத்தீர்வுகள் முன்மொழியப்படவேண்டும். தட்டுப்பாட்டில் இருக்கும் உணவிற்குப் பதிலாக வேறு உணவுகளை மாற்றீடாகப் பயன்படுத்துவது பற்றிய அறிவுறுத்தல், வீட்டுத்தோட்டங்கள் பற்றிய விழிப்புணர்வுகளை ஏற்படுதல் போன்றவற்றை எடுத்துக்கூறலாம். ஆனால்,எடுத்த எடுப்பில் இனி எல்லோரும் இரண்டுவேளைகள் மட்டும் உண்ணுங்கள் என ஒரு ஆட்சியாளர் கூறுவதென்பது பொறுப்பற்றசெயல். ஏற்கனவே இந்திய ஊடகங்கள் தங்களுடைய சுயகீக ரேட்டிங் என்கிறஒன்றுக்காக இலங்கையில் கடும் பஞ்சம், மக்கள் எல்லோரும் நடுத்தெருவில் நிற்கிறார்கள் என அள்ளிவிட்டுக்கொண்டிருந்த நிலையில் உள்நாட்டுக்குள் ஒரு அமைச்சரின் இப்படியான கருத்துக்களும் வருமாயின், இலங்கையை நம்பி யாரும் முதலீடுகளை செய்யவதில் ஒரு தயக்கநிலை, தடங்கல் நிலை ஏற்படக்கூடும் இல்லையா?

வளர்ந்த நாடுகளும், பன்னாட்டு நிறுவனங்களும் உணவு அரசியலை எப்படியெல்லாம் நம்மீது திணித்துவருகின்றன என்பது பற்றி சற்றுத்தேடிப்பார்த்தபோது கிடைத்த தகவல்கள் அதிர்ச்சியாக இருந்தன. இரண்டாம் உலகப்போர் முடிவடைந்த நிலையில் ஏராளமான எதிரி நாடுகளைத் தாக்கவைத்திருந்த வெடிபொருட்கள் ‘டன்’ கணக்கில் மீதமாயினவாம். அந்த வெடிப் பொருட்களையெல்லாம் என்ன செய்வது என அந்த நாடுகள் யோசித்துக்கொண்டிருந்தபோது அவற்றை பூச்சிக்கொல்லிகளாக பயன்படுத்தலாம் என அறிவியல் அறிஞர்கள் தெரிவித்தனர். இதையடுத்து, பூச்சிகளால் உணவு உற்பத்திக் குறைவு பற்றி கவலையடைந்திருந்த ஆபிரிக்க மற்றும் கீழைத்தேய நாடுகளினுள், குப்பை என கழிக்கப்பட்டஇந்த வெடிபொருட்கள் உள்நுழைந்தன.

இரண்டாம் உலகப்போரின்போது ஹிட்லர் பல லட்சம் மக்களை கொன்றுகுவிக்கப் பயன்படுத்திய ஓர் வேதியல் பொருளை தயாரித்துக்கொடுத்த ஜெர்மனியின் ஒரு பிரபலமான கெமிக்கல் நிறுவனம்தான் இன்றுவரையில் செயற்கை உரங்களைத் தயாரிப்பதில் முன்னோடி என்றால் இனி சொல்வதற்கு என்ன இருக்கிறது?

ஒரு காலத்திற்குமுன் அமெரிக்கா, ஐரோப்பா போன்ற நாடுகளின் மண்ணில் சத்தில்லாமல் விவசாயம் மேம்படாமல் இருக்கவே, என்ன செய்வதென்றறியாமல் கல்லறைகளில் இருக்கும் மனித எலும்புகளை எல்லாம் எடுத்துப் பொடியாக்கி அதனை உரமாகப் பயன்படுத்தினார்கள். பின் இந்த மனித எலும்புகளை வேட்டையாடுவதற்காகவே கல்லறைகள், மயானங்களை வேட்டையாடினர். இப்படி இவர்கள் எந்தெந்த நாட்டுக்குள்ளெல்லாம் நுழைந்து வேட்டையாடினார்களோ அந்தந்த நாடுகளின் மண் சத்து இல்லாமலாகி அங்கெல்லாம் விவசாயம் வீழ்ந்துவிட, மேலை நாடுகளில் விவசாயம் தப்பித்துக்கொண்டது.



பின்பு ஒரு அறிவியலாளர் பறவைகளின் எச்சத்தில் நைட்ரஜன் இருக்கிறது, அதை வைத்து விவசாயம் செய்யலாம் எனக் கண்டறிந்தபோது, ஆளாளுக்கு பறவை எச்சத்தினைத் தேடி பல தீவுகளையும் அடிமைப்படுத்திக்கொண்டன இந்த நாடுகள். இப்படி மேலைநாடுகளெல்லாம் தம் நாட்டு மண்ணையும் விவசாயத்தையும் ஏதொவொருவகையில் பேணிப்பாதுகாத்துக் கொண்டன. அவர்கள் விற்கும் செயற்கை உரங்களை இறக்குமதி செய்துகொண்டு மூன்றாம் உலக நாடுகள் மட்டும் வல்லரசுகளினதும் பன்னாட்டு நிறுவனங்களினதும் சூழ்ச்சியில் சிக்குண்டு சின்னாபின்னமாகி உள்ளதென்றே கூறவேண்டும் .

விவசாயப்பொருட்கள்மீது தெளிக்கப்படும் பூச்சி மருந்துகள் எவ்வளவுதான் மழை பெய்தாலும் எவ்வளவுதான் கழுவி எடுத்தாலும் அந்தக் கிருமிநாசினிகளின் எச்சங்கள் முழுதுமாக அகன்றுவிடுவதில்லை. காலப்போக்கில் கண்ணுக்குத் தெரியும் அளவில் அவை மாறிப் போயின. உதாரணம் நாம் உண்ணும் திராட்சை போன்ற பழங்களில் படிந்திருக்கும் வெள்ளை நிறமான படிமம் பூச்சிக்கொல்லிகளின் எச்சம் என்பது நம்மில் எத்தனை பேருக்கு தெரிந்திருக்கும்? உலக நாடுகள் பூச்சிக்கொல்லிகளின் பாதிப்பை உணர்ந்து தடைவிதித்த நிலையில் நம்முடைய நாட்டில் DTTA என்கிற அபாயகரமான பூச்சிக்கொல்லி வீட்டைச் சுற்றியுள்ள எறும்புகளைக் கொல்லக்கூட சர்வசாதாரணமாகப் பயன்படுத்தப்படுகிறது என்பதுதான் யதார்த்தம். உண்மையில், பூச்சிக்கொல்லிகள் பயன்படுத்தப்படும் உணவை உண்பவர்களின் நூறுபேரில் முப்பது பேருக்கு புற்றுநோய் வரும் அபாயம் உள்ளதாக கூறப்படுகிறது.

உணவும் உடல்நலமும் ஒன்றோடு ஒன்று சேர்ந்தே இயங்கும் வாழ்வியலைக் கொண்ட நமது நாட்டில் இன்று உணவு தனியாகவும் ஆரோக்கியம் தனியாகவும் பிரிந்து வணிகம் செய்கிறது என்பதுதான் நிஜம்.

இப்படிப் பூச்சிக்கொல்லிகள் அதிகரிக்க உணவுக்குப் பின்னால் இருக்கும் நுண் அரசியலே காரணம் எனலாம். முன்பெல்லாம் நெல் போன்ற பிரதான பயிர்களைப் பயிரிட்டதன்பின் விவசாயிகள் உபபயிர்கள் என்கிற பேரில் பருப்பு மற்றும் பயறு வகைகளை அதிகமாகப் பயிரிட்டனர். உண்மையில் அதன் பின்னிருக்கும் சூட்சமம் என்ன தெரியுமா? இயற்கையாகவே காற்றில் இருக்கும் நைட்ரஜன், பொஸ்பரஸ் போன்ற சத்துக்களை உறிஞ்சும் பருப்புவகை பயிர்கள் அவற்றை பூமியின் அடியில் சேமித்து வைக்கும்போது நிலம் அதற்குத்தேவையான தழைச்சத்தினை இயற்கையாகவே பெற்றுக்கொள்ளும்.

ஆனால், இன்றோ நிலைமை தலைகீழ். இலங்கையில் தாராளமாக பருப்புவகைகளும் சிறு தானியங்களும் இறக்குமதி செய்யப்படுவதால் அதன் விளைவு. பன்னாட்டு நிறுவனங்களால் விற்கப்படும் செயற்கை உரமான நைட்ரஜனை காசு கொடுத்து வாங்கி நிலத்தையும் பாழ்படுத்திக்கொண்டிருக்கின்றோம் . யூரியா என்கிற விஷத்தை உரம் என்கிற பெயரில் பலதலைமுறைகளாக விவசாயிகள் நம்பி பயன்படுத்திவந்தனர் .

இவ்வாறு ஒரு நாட்டைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றால் அந்நாட்டின்மீது போர் தொடுத்துதான் கட்டுப்படுத்த வேண்டும் என்கிற நிலைமைமாறி, உணவே பேராயுதம் என்கிற மோசமான ஆயுதத்தை கையில் எடுத்திருக்கின்றன சர்வாதிகார நாடுகள் என்றால் மிகையில்லை. பெரியபெரிய பன்னாட்டு நிறுவனங்கள் லாபம் சம்பாதிக்க நம் மண்ணை நாமே விஷமாக்கிக்கொண்டிருக்கின்றோம். உணவு மற்றும் மருத்துவ வணிகத்தின் லாப நோக்கத்தினால் உணவானது நஞ்சாகமாறி பல நோய்களையும் இயற்கைச் சீர்கேடுகளையும் உருவாக்கியுள்ளது. இந்தநிலையில் இயற்கை உணவினை நாடியும் இயற்கை விவசாயத்தை நாடியும் மக்கள் பயணப்படவேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.





# வனம்

## அங்கம்: 07

### கொற்றவை

வன்னி என்றாலே ஆனந்தனின் மனதில் வருவது திரும்பிய பக்கமெல்லாம் பச்சைப் பசேலென்று இருக்கும் அதன் அழகுதான். கண்ணுக்கு எட்டிய வரைக்கும் கண்ணுக்கும், மனதுக்கும் குளிர்ச்சியாக இருக்கும். முதன்முதலில் வசந்தன் கிளிநொச்சியில் காலெடுத்து வைத்தபோது அது ஒரு வசந்த காலம். அவன் கண்ட மனதுக்கு ரம்மியமான இயற்கைக் காட்சிகள் காலத்துக்கும் அழியாமல் அவன் மனதில் ஆழப் பதிந்து விட்டன.

இன்று, சுகந்தன் அண்ணரைப் பார்த்ததும், அவரைப் பற்றி அறிந்ததும் ஒருவித அதிர்ச்சியாகி விட்டது ஆனந்தனுக்கு. நொந்துபோன மனதுடன் தான் தங்கியிருக்கும் இடத்தை நோக்கி நடந்தவனுக்கு முன்புபோல இந்த இடம் அவ்வளவு அழகானதாகத் தெரியவில்லை. அந்த நேரத்தில் தர்மபுரம் பிரதேசம் ஒரு பின்தங்கிய பிரதேசமாக இருந்தது. தூர ஒன்றாகத்தான் போக்குவரத்துக்கான பஸ் சேவையும் இருக்கும். மக்கள் வெள்ளந்தியாக இருப்பார்கள். சலிக்காமல் ஓடியோடி வேலை செய்யும் அவர்களைப் பார்க்கும் போது இள வயதினனாக இருந்த ஆனந்தனுக்கு மலைப்பாக இருக்கும்.

இப்போது நிறையக் கட்டடங்களும் வீடுகளும் முளைத்திருந்தன. முன்பிருந்த பசுமை தொலைந்து ஒருவித வரட்சி தென்படுவதாகத் தோன்றியது ஆனந்தனுக்கு. பிரதேசத்தில் அடிக்கடி பிரச்சனைகள் வருவதைச் சாக்காக வைத்து பொலிஸ்காரர் நடமாட்டமும் அதிகம் என்று கேள்விப் பட்டிருந்தான். 'தேவையில்லாமல் வம்புக்குள் போகக் கூடாது' என்று கால்களை எட்டி வைத்தான். அவன் தங்க ஒதுக்கியிருந்த இடத்தில் பத்துப் பதினைந்து பேர்வரை தங்க வேண்டி இருந்தது.

வீடு கலகலப்பாக இருந்தது.

'' தம்பி ஆனந்தன்..! சாப்பாடு வந்திட்டுது... சாப்பிடும்... இதை விட்டிட்டா, பிறகு அடுத்த சாப்பாட்டு நேரந்தான்.... விட்டிடாதையும்...''

என்றார் ஒரு கட்சிக்காரர். கட்டுச் சாப்பாடு என்னவோ நன்றாகத்தான் இருந்தது. பொருட்களுக்குத் தட்டுப்பாடு, உச்சியில் நிற்கும் விலைவாசி எல்லாவற்றையும் தாண்டி கட்சி ஒரு நல்ல சாப்பாட்டிற்கு ஒழுங்கு செய்திருக்கிறது. ஆனாலும், பழைய சோறும் பச்சைமிளகாய் சம்பலுமாக இருந்தாலும் இப்பவே சாந்தியின் கைச் சாப்பாட்டிற்கு மனம் ஏங்கியது.

போனமுறை கட்சிக் கூட்டத்தின் போதான சாப்பாட்டை சிலாகித்துப் பேசிக் கொண்டிருந்தார் ஒரு வெள்ளை வேட்டிக்காரர். சிரித்துப் பேசி குதூகலமாகவிருந்த அந்தக் குழுவைப் பார்க்க ஆச்சரியமாக இருந்தது.

'இவர்களைக் கவலைகள் எதுவும் தாக்குவதில்லையா? தங்கள் தங்கள் குடும்பத்தை எப்படிப் பார்க்கிறார்கள்? சமுகத்தின் பிரச்சனைகளை கட்சி சார்ந்தவர்கள் என்ற ரீதியில் சந்திக்க வேண்டியிருக்கும், அவை எவையும் இவர்களைப் பாதிக்காதா?'

ஆனந்தன் ஒரு உள்முக சிந்தனையாளன். எல்லாவற்றையும் அவதானிப்பான். யோசித்துத்தான் பேசுவான். தேவை ஏற்பட்டாலன்றி அள்ளளவாகப் பழக மாட்டான். தன்னுடன் தங்கியிருந்தவர்கள் பேச எடுத்துக்கொண்ட விடயங்களும் அவற்றைப் பேசிய விதமும் ஆனந்தனுக்கு ஏனோ ஒத்து வரவில்லை. சமுகம் இப்படித்தான் இருக்கிறது. ஆளாளுக்கு தம்முடைய பகட்டைக் காட்டுவதும், பெருமை பேசுவதும், சமயங்களில் அடுத்தவர் மனம் கோண வெட்டிக்கதை பேசுவதுமாக.

''வெக்கையாக் கிடக்கு.... காலாற நடந்து போட்டு வாறன்...'' பொத்தாம் பொதுவில் சொல்லிவிட்டு ஒழுங்கையில் இறங்கி நீளவும் நடந்தான். கொஞ்ச தூரம் போனதும் மீண்டும் பழைய ஞாபகங்கள் அவனைச் சூழ்ந்து கொண்டன.

# வலை



'இந்த ஒழுங்கையின்ர தொங்கலிலதான் ஈஸ்வரன் காயப்பட்டு விழுந்தான். ஏற்கனவே ஒரு இடத்தில முட்டுப்பட்டு நடந்த சண்டையில சன்னம் பாய்ஞ்ச காலோல கைப்பிடியா கொண்டு வரும் போதுதான் எதிர்பாராமல் இந்த இடத்துக்கை அமைதிப் படையினர் வந்திட்டாங்கள். அவங்களும் எதிர்பார்க்கேல்லை. அண்டைக்கு பெம்பிளைப் பிள்ளையளும் ரீமில இருந்தவை. பெருசா சண்டை அனுபவம் இல்லை எண்டும் சொன்னவை. ஆனா, அவை காட்டின தீரம்..! அப்பப்பா..!என்ன ஒரு ஆவேசம்!! அவங்கள் வெருண்டு போனாங்கள். அண்டைக்கு பிள்ளையள் இல்லையண்டா கனக்க இழப்பு விழுந்திருக்கும்..'

ஞாபகங்கள் தந்த கிளர்ச்சியுடன் ஓரத்தில் இருந்த கல்லில் அமர்ந்தான் ஆனந்தன். சரியாக வதனியும் 'கோல்' எடுத்தா.

''எங்கை நிக்கிறீங்கள் அண்ணை..! சந்திக்கலாமோ...?''

சொல்லி ஐந்து நிமிடம் ஆகேல்லை வதனி வந்திட்டா.

''இடத்தைக் கண்டு பிடிக்கிறது கஷ்டமே அண்ணை..!'' பாலை மரத்தடியில கல்லில இருக்கிறன் எண்டியள். மரங்களை எல்லாம் கண்டபாட்டில தறிச்சுத் தள்ளுறாங்கள். இந்த மரம் மட்டுந்தான் எனக்குத் தெரிஞ்சு அப்பிடியே நிக்குது. அதான், கண்டுபிடிக்க கஸ்டப்படேல்லை...'' என்றா அவ.

நீண்ட நாட்களின் பின், சமுக உணர்வுள்ள ஒரு சக மனுசியுடன் பேசுவது ஆறுதலாக இருந்தது.

''வழமையா கொஞ்சம் பின்தங்கின பகுதியளில தான் கூட்டம் வைக்கிறது. தெரியுந்தானே....? இந்த இடம் இப்ப இப்ப வில்லங்கமான இடமா மாறிக்கொண்டு வருது.... களவுகள், கொலையள் கூட நடந்திருக்கு.... கஞ்சா கசிப்பும் தாராளமாப் புழங்குது.... சமுக விரோதியளின்ர கூடாரமா மாற முதல் ஒரு சீர்திருத்தம் செய்ய வேணும் எண்டுதான் இப்ப இஞ்ச கட்சிக் கூட்டம்.... நீங்கள்தான் பந்தல், மைக் எல்லாத்தையும் பாக்கப் போறியள்... உங்களுக்கு உதவிக்கு ஆக்கள் இருப்பினை..... நீங்கள் நிண்டு மேற்பார்வை பார்த்தாக் காணும்...''

''நீங்கள் உதுக்கு என்னைக் கூட்டிவந்த மாதிரித் தெரியேல்லையே.! என்ன விசயம்? சொல்லுங்கோ அக்கா!''

பளிச்சென்று சிரித்தா வதனி.

''சரியாச் சொன்னியள்.... உங்களோட தங்கி இருக்கிறவையைப் பாத்தனீங்கள் தானே? தங்களுக்கும் சமுதாயத்துக்கும் தொடர்பில்லாதவை மாதிரி இருப்பினம்.... இவையை வைச்சுத்தான் நாங்கள் வேலை செய்ய வேணும்.... எனக்கு உங்களைப்போல சமுக சிந்தனையுள்ள ஆட்களின்ர உதவி வேணும்..... நான் போய்ச்சேர முதல் என்னால முடிஞ்சதைச் செய்ய வேணும் எண்டு பிரயாசைப்படுறன்... பகட்டுக்கும் பதவிக்கும் நான் எதையும் செய்யேல்லை.... நம்புறியள் தானே அண்ணை?''

ஆனந்தன் தலையசைத்தான்.

''எல்லாருமே மாறிப்போச்சினம்... அவங்களும் திட்டமிட்டு எல்லாத்தையும் நகர்த்துறாங்கள்... சனங்களும் தன்னிச்சையா நடக்குதுகள். நாட்டுப்பற்றும் சமுகப் பிடிப்போடயும் இருந்த சனம்... என்ன கேவலமாப் போச்சு? பெடித் தரவளியளைப் பாருங்கோ... விடுகாலியாத் திரியுதுகள்... தாய் தகப்பன்ரை சொல்லுக் கேக்கிறதும் இல்லை... ஆரையும் மதிக்கிறதும் இல்லை. முந்தின மாதிரி கட்டுக்கோப்போடை இருக்கிற பிள்ளையளைப் பாக்கிறது குதிரைக் கொம்பாக் கிடக்கு...''

வதனி ஆதங்கமும் ஆவேசமுமாகத் தொடர்ந்தா.

''நீங்கள் இந்த இடத்தை ஒருக்கா 'ஸ்ரடி' பண்ணி, என்னென்ன பிரச்சனையிருக்கு, எப்பிடி சரி செய்யலாம் எண்டு ஒரு 'பிளான்' தர வேணும். ஆக்களோட கதையுங்கோ.... உங்களுக்குத் தெரியாதது ஒண்டையும் நான் சொல்லேல்லை அண்ணை. எனக்கென்னவோ இப்பிடி கொஞ்சம் மறைவா இருக்கிற இடத்தில இருந்துதான் சமுக விரோத செயலுகள் கிளம்புறமாதிரிக் கிடக்கு... அந்த பள்ளிக்குடப் பிள்ளை செத்த பிரச்சனை.... அதையும் இதோட சேர்த்துப் பாக்க வேணும்... அவை கல்லாத்தில இருக்கினம்....''

சரியான பாதுகாப்பில்லாமல், ஒழுங்கான பின்புலம் இல்லாமல் சமுகச் செயற்பாடுகளினுள் இறங்குவது இங்கு கடினம்தான். காவலுக்கு நிற்பவர்கள் எனப்படுபவர்களே சமுக விரோதச் செயல்களைத் தொடங்கி வைத்து, தூண்டி விட்டு நாங்கள் அழிவதை வேடிக்கை பார்க்கிறார்கள். தட்டிக் கேட்பவர்கள்தான் இங்கு சமுகவிரோதிகளாகப் பார்க்கப் படுகிறார்கள்.

பல்வேறு பிரச்சனைகளை மனம்விட்டுக் கதைத்து, அலசி ஆராய்ந்த திருப்தியோடு தங்குமிடத்தை அடைந்தான் ஆனந்தன். இன்னமும் அங்கு பேச்சும் சிரிப்புமாக இருந்தது. சிலர் பானம் அருந்தியிருக்கவும் கூடும். பேச்சு ஒரு மாதிரியாக இருந்தது. பெரிதாகப் பட்டுக் கொள்ளாமல், இரவுச்சாப்பாட்டினை முடித்த கையுடன் பாயை விரித்து விட்டான் ஆனந்தன்.

குழப்பமான ஒரு நாள். பலதரப்பட்ட மக்களை ஒரே இடத்தில் சந்தித்தது, பிரயாண அலுப்பு என்று படுத்ததுதான். ஆனால்,தடுப்பு முகாமில் இருந்து வந்ததில் இருந்து ஆனந்தன் குடும்பத்தைப் பிரிந்து வெளியில் தங்கியதில்லை, போதாக்குறைக்கு சுற்றிவரப் படுத்திருந்தவர்களில் யாரோ பலமாகக் குறட்டை விட்டார்கள்.எல்லாமுமாகச் சேர்ந்து அவனால் சரிவர உறங்க முடியவில்லை. சுகந்தன் அண்ணையின் ஞாபகங்களும் கனவுபோல இடையிடை வந்து அவன் தூக்கத்தைக் குழப்பின.

விடிந்தவுடன் மாநாடு நடக்கும் இடத்திற்குப் போய்விட்டார்கள். தொட்டுத் தொட்டு நிறைய வேலைகள். ஓய்வே இருக்கவில்லை. எல்லாம் முடிந்து அவர்களின் மாநாடு ஆரம்பமாகியதும் அப்பாடா என்று இருந்தது அவனுக்கு. 'மைக்' பொறுப்பு அவனிடம் இருந்ததால் விட்டு விட்டு எங்கும் போக முடியவில்லை. சாவகாசமாக உட்கார்ந்து ஒவ்வொருத்தரையும் தனக்குள் எடைபோட்டுக் கொண்டான் ஆனந்தன்.





# வலை

'இவ்வளவு பேர் ஒன்றாக இருக்கிறார்கள், பின்னால் கட்சி என்ற ஒரு அதிகாரம் இருக்கிறது பணத்திற்கும் பிரச்சனை இருப்பதாகத் தெரியவில்லை... எவ்வளவு வேலைகள் செய்யலாம்....? சமுகத்தில் இறங்கி வேலை செய்ய எல்லா வாய்ப்பும் இருந்தும் ஏன் எந்த மாற்றத்தையும் கொண்டுவர மாட்டேன் என்கிறார்கள்?'

பின்னேரம் சுகந்தன் அண்ணையின் கடைப்பக்கம் போனான். அவர் அவ்வளவாகப் பட்டுக் கொள்ளவில்லை. ஏதோ கடைக்கு வந்த முன் பின் தெரியாதவருடன் பேசுவதுபோல பழகியதும், முகச் சுளிப்புடன் இருந்ததும் ஆனந்தனுக்கு ஒருவித வேதனையைக் கொடுத்தது. பின்னாலிருந்து அமைதியாக இருக்கும்படி கௌரி – சுகந்தனின் மனைவி – சைகை செய்தா.

''பாதிக்கு மேற்பட்ட நாட்கள் அவர் இப்படித்தான் நடந்து கொள்வார், இது ஒன்றும் புதிதில்லை'' என்றா கௌரி. சமயங்களில் அவர் தன்னைத் திருமணம் செய்ததையே மறந்து,

'' நீர் என்ன இங்க நிக்கிறீர் ஐஸே?'' என்னுவாராம்.

கௌரிதான் சுகந்தனைப் பற்றித் தனக்குத் தெரிந்த அனைத்தையும் சொன்னா. இரண்டு வேறுவேறு சந்தர்ப்பங்களில் அவர் மனைவியையும் மகளையும் தொலைத்திருக்கிறார். சிறுவர் காப்பகத்தில் விழுந்த ஷெல்லில் மகள் போன அதிர்ச்சியையும் தாங்கி, இரண்டுபேரும் முன்னணியில நின்றவையாம். இவர் வயிற்றில படுகாயமடைந்து மருத்துவமனைக்கு கொண்டு வந்திருக்கினம். அதே இடத்துக்கு வந்த உடல்களில அவரின் மனைவியின் உடலும் இருந்ததாம். அப்பவும் மனிசன் கலங்காமல் கடைசிச் சண்டையில நிண்டதாம்.

''எல்லாம் முடிஞ்சுது என்று அவங்கள் அறிவிச்ச பிறகு, அந்த அதிர்ச்சி அவரைக் கடுமையாத் தாக்கீற்றுது'' என்றா கௌரி.

நாங்கள் உருவாக்கிய உலகம் வேறு, நடப்பு வேறு என்ற யதார்த்தத்தை ஏற்றுக் கொள்ள முடியாமல் எத்தனைபேர் சித்தம் குழம்பிக் கிடக்கிறார்கள்?அவர்கள் ஒருவிதம் என்றால் ஆனந்தனைப் போன்றவர்கள் இன்னுமொரு ரகம். அடுத்தவரைப் பற்றிக் கிஞ்சித்தும் கவலைப்படாமல் வெளிநாட்டுப் பணத்தையும், பகட்டையும், பெரிதாக எண்ணி வாழும் ஒரு போலியான வாழ்க்கையை வாழ முடியாமல், தன்னுடைய கொள்கைகள் ஒழுக்க நெறியிலிருந்து பிறழாமல் வாழ்க்கையோடு நாளாந்தம் போராட்டம் நடத்துபவர்கள்.

ஆயாசமாக இருந்தது. வீட்டுக்கு தொடர்பெடுத்து சாந்தியுடனும் வெண்ணிலாவுடனும் கதைத்த பின் மனம் ஓரளவுக்கு ஆசுவாசமாகியது. தங்குமிடத்தை அண்மித்தபோது எதுவோ சரியாக இல்லாதது போன்ற உள்ளுணர்வு எழுந்தது. வாசலில் நின்றவர்களின் முகமே சரியில்லை. உள்ளூர எழுந்த பதட்டத்தை மறைத்துக்கொண்டு வீட்டினுள் நுழைந்தான் ஆனந்தன்.

மிடுக்காக உடையணிந்திருந்த இருவர் அங்கே ஆனந்தனின் வரவுக்காகக் காத்திருந்தனர்.

''விசாரிக்கோணும்! போகலாமோ?''

தொடரும்...

# யார் கடவுள்?

ஆதி அந்தமில்லை!
அருவம் உருவமில்லை!
உயிரும் உணர்வுமில்லை!
பாச பந்தமில்லை!

ஏதும் சுயமாய் அமைவதில்லை!
அனைத்திற்கும் முதல் உண்டு
எனில்
நீ இருக்கிறாய்!!
இருந்தும்..
எவ்வாறு நீ அமைந்தாய்?
ஏன் இவை அமைத்தாய்?

உடல் படைத்தாய்!
உயிர் படைத்தாய்!
ஊன் படைத்தாய்!
உலகைப் படைத்தாய்!!

ஏன் படைத்தாய்?
உன் இச்சைக்கா?
உணர்ச்சிகள் கடந்த உனக்கு
மனிதன் ஆள ஆசை ஏன்??

அது ஒரு புறம் ஒதுக்கி
எங்களின் ஆராதனை
உன் செவிகளுக்கு எட்டுமா?

மதம், இனம் பெயர் கொண்டு
மனிதன் உனை
ஆள்வது தெரியுமா?
குண்டு வெடிக்கும் சப்தம்
அறிவாயா?
ஏழைகளின் கண்ணீர்
கண்டாயா?

மனிதன்
தாவரம் கொன்று
விலங்கு கொன்று
மனிதம் கொன்று
சக மனிதன் கொன்று
ரசிப்பதை அறிவாயா?

உழைப்பவன்
உணர்ச்சிகள் நீ
அறிவாயா?
விதைப்பவன்
மரிப்பதை
அறிவாயா?

மரித்தவர் எங்கு செல்வர்?
மரணத்தின்
பின் வாழ்வு உண்டா?
என்னுள் இருக்கிறாயா?
அவனுள் இருக்கிறாயா?

நான் கடவுளா?
அவன் கடவுளா?
பிரபஞ்ச எல்லை காண
விஞ்ஞானம் தவிக்கிறது!

உன்னைக் காண
மெய்யானம் தவிக்கிறது!
ஏனிந்தத் தடுமாற்றம்?
ஏனிந்தத் திருப்பம்?

இறைவா!
உனை எண்ணி எண்ணி
என்னுள் தவிக்கிறேன்
நான்!!
புதிருக்கு
பதில் தேடி..

இருந்தும் நீ
புரியாத புதிர்!!

யாதனா



# பெண்ணே ...!!

'அரிது அரிது பெண்ணாய்
பிறத்தல் அரிது'
எனும் புதுமொழி
இன்று மெய்ப்பிக்கப்படுகிறது!

பெண்ணே!
உன்னால் ...
உன்னைத்தோற்கடிக்கும்
பல புள்ளிகளை கொண்டு
உன்னை
சரி செய்து கொள்....!!
அங்கே தொடங்கட்டும்
உன் வெற்றி பயணம்...!

கொடுமைகள் தந்து
மனதளவில்
உன்னைக் கொன்றுவிட்ட
ஈனப்பிறவிகளை
மன்னித்து விடு...!
அவர்கள் மன்னிப்புக்கு உரிய
வர்கள்
என்பதற்காக அல்ல...!
மன்னிக்கும் மனம்
பெண்ணுக்கே உரியது
என்பதற்காக...!!

தட்டிக்கேட்பவர் வெளியில்...
தட்டித்தட்டி கேட்பவர் சபையில்
இதுதான் உலகம்...!!
தைரியத்தை சட்டைப்பைக்குள்
வைத்து விட்டு நீதி தேடியவர்கள்
இன்னும் நீதிமன்ற வாசலில்...!
துணிந்து எழுந்து
முன்னே செல்...!!
உன் முயற்சிக்கு
சான்றாய் நீயே
முளைப்பாய்....!!

உன் நிம்மதி
நிலைகுலையும்
தருணத்தில்
நீ நிதானத்தை
நிரந்தரமாக்கிகொள்!!
ஏனென்றால் உன் குழப்பத்தில்
குளிர் காயும் கூட்டம்
இங்கு ஏராளம்...!

கைப்பிரம்பாய் உன்
பேனையை கூர்மை செய்..!
எழுத்துக்கள் கொண்டு
தலையெழுத்தை செதுக்கிகொள்..!
கடும் விஷமாய்
பார்வையை பரிசளி..!
ஆலகால விஷத்தை
அவ்வப்போது
அள்ளித் தெளித்துவிடு..!

உனை ஆட்டிவைக்கும்
கூட்டம் தனில்..
உன்னை சுற்றி
விலங்கினமே வாழ்கிறது...
அவற்றுள்
நீயும் மாறி விடு,
அன்னம் போல்
அவதரித்து விடு..
கழுகைப் போல்
பாடம் கற்றுக் கொள்...
மனிதனைப் போல் மட்டும் வாழ
எண்ணாதே...
அது குணத்தாலே
அழிந்து வரும் உயிரினம்....!

உயர உயரப் பறந்து செல்!
உனக்கான விதியை
நீயே எழுதிக்கொள்...!
சிங்கத்தை போல் தனித்திரு..!
சிறுத்தையைப்
போல் வேகம் கொள்!
சிரமத்தை தாண்டி
எழுந்து நில்...!
தடைகளை
தகர்த்து வெளியே வா...!!

உயிர் போகும்
வலிகள் தந்து
உலுக்கிவிட்டவர்கள்
நீ வீழ்வதை
பதிவு செய்ய
காத்திருக்கிறார்கள்...

இவ்வளவும் தாங்கி
நீ வாழ்கிறாய்
என்றால்.
உன்னால் சாதிக்கப்பட
வேண்டிய ஒன்று
இன்னும் இருக்கிறது...
அதை நோக்கி
அடி எடுத்து வை..!
பீனிக்ஸ் பறவை
போல் புதுப்பிறவி எடு...!
புலரும் புது
விடியல் உனக்காக...!!

**மகளிர் தின வாழ்த்துக்கள்!!**



சோபி (இலங்கை)









# மகளிர் தின வாழ்த்துகள்



